பேசும் படம்

பிப்ரவரி 1960 · 75 காசு



வேகமாக தயாராகிறது!
ஞானோதயம் பிக்சர்ஸ்
பத்மாவதி
கதை, வசனம்.
P. ஆதிமூலம்
டைரக்ஷன்.
K. சுந்தரம்
ஒளிப்பதிவு.
P.B.S. மணி
இசை.
V.R. காமாட்சிராஜூ
ஸ்டுடியோ.
வாஹினி-விஜயா
ஆர்ட்.. பிர்மா
BAW BROS.
விபரங்களுக்கு: ஞானோதயம் பிக்சர்ஸ், 128, ஆற்காடு ரோடு, சென்னை-24.

OFFICE OF THE REGISTRAR OF BOOKS
FEB 1959
MADRAS



தபால் நிலையங்களின் ஒரு பெரிய பிரச்னை, கடைசி நேரத்தில் வந்து குவியும் கடிதங்கள், பார்சல்கள் முதலியவை உண்டாக்கும் நெரிசலே யாகும். இந் நிலையில், சில தபால்கள் அன்றையக் கட்டிலேயே சேராமல் தங்கி விடவும் கூடும்.

தபால் பெட்டியில் சீக்கிரம் போடப்படும் கடிதங்கள் அன்றைய தபால் கட்டிலேயே சேர்ந்து விலாசதாரருக்கும் தாமதமின்றி போய்ச் சேரும்.

நாள் முழுதும் கொஞ்சம் கொஞ்சமாக கடிதங்களை பெட்டியில் போட்டு தபால் நிலயத்தின் கடைசி நேர நெரிசலைக் குறையுங்கள்.

உங்களுக்கு சிறந்த முறையில் சேவை செய்ய எங்களுக்கு உதவுங்கள்

தபால் மற்றும் தந்தி இலாகா

DA 59/350

89698

படம் 18

காட்சி 6

பேசும்படம்

★ பிப்ரவரி - 1960 ★

பொருளடக்கம் பக்கம்

1.	கலையுலகில்	4
2.	புதிய வெளியீடுகள்	7
3.	செய்திப் படங்கள்	11
4.	"என்னைப்பார் படத்தில் பி. எஸ். சரோஜா	17
5.	சாரணியின் "காளிதாஸ்" படத்தில் ராஜசுலோசனு	18
6.	மோகேஷ்ஸ்வர் சித்ராவின் "அருந்ததி"யில் அஞ்சலிதேவி	19
7.	மகாதேவி பிக்சர்ஸ் படத்தில் இ. வி. சரோஜா	20
8.	வெட்டுங்கள் வெட்டுங்கள்	26
9.	ஸ்டுடியோ விஜயம்	28
10.	நெஞ்சம்விட்டு நீங்காத நினைவு	33
11.	அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" (படக்காட்சிகள்)	41
12.	பாரகன் பிக்சர்ஸ் "நீதிக்கொரு பெண்" (,,)	45
13.	நான் ரசித்த காட்சி	51
14.	ஹிந்திப் படங்கள்	58
15.	அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு	60
16.	"இவன் அவனேதான்" (படக்காட்சிகள்)	65
17.	கேள்வி - பதில்	74
18.	ஒளி தெரிகிறது	83
19.	தபால் பெட்டி	90
20.	அடுக்குக் கொண்டை	101
21.	வாஹினியின் "ராஜமகுடம்" (படக்காட்சிகள்)	105
22.	செய்திச்சுருள்	115
23.	"தந்தைக்குப்பின் தமையன்" (திரைக்கதை - வசனம்)	121

★ **EIGHTEENTH YEAR OF PUBLICATION** ★

PESUM PADAM, Tamil Monthly Magazine: Printed and Published by T. V. Ramanath, at Ramanath Press, Arcot Road, Kodambakkam, Madras-24. Phone: 88728 Proprietors: Ramanath Publications. Managing Editor T. V. Ramanath.

EDITORIAL & PUBLICATION OFFICES:

Arcot Road, Kodambakkam, Madras - 24.

MEMBER: AUDIT BUREAU OF CIRCULATIONS LTD.

Registered as a Newspaper in Ceylon.

கலையுலகில்

சர்க்காரின் சினிமா மகாநாடு

மேடைக்கு மேடை, விழாவுக்கு விழா நமது நடிகர்களும் தயாரிப்பாளர்களும் பேசும்போது "சர்க்கார் சினிமாவுக்கு இன்னும் சரியான ஆதரவும் உதவியும் செய்து தரவில்லை" என்று சொல்வதைக் கேட்டு, சென்னை சர்க்கார் இதற்கான பரிகாரங்களை ஆராய ஒரு மகாநாட்டைக் கூட்டினார்கள். சென்ற மாதம் 8, 9, 10 தேதிகளில், சென்னை ராஜாஜி ஹாலில் நடைபெற்ற இந்த மகாநாட்டில் கலந்து கொள்ள சினிமாவுடன் தொடர்பு கொண்டுள்ள எல்லா சங்கங்களிலிருந்தும் பிரதிநிதிகள் அழைக்கப்பட்டு, அவர்களது கருத்துக்களைச் சொல்லும்படிக் கேட்டுக் கொள்ளப்பட்டார்கள். ஏராளமான நடிகர்களும், மற்றும் படத்துறை பிரமுகர்களும் கலந்து கொண்ட இந்த மகாநாட்டை சென்னை நிதி மந்திரியும் கல்வி மந்திரியுமான திரு. சி. சுப்ரமண்யம் அவர்கள் தலைமை வகித்து, ஆரம்பித்து வைத்தார்கள்.

'ஸ்ரீநிவாச கல்யாணம்' படத்தில் எஸ். வரலக்ஷ்மி, சாவித்திரி.

"சினிமாத் தொழிலுக்கு சர்க்கார் தேவையான உதவிகளைச் செய்யத் தயாராக இருக்கிறது. அது எந்த வகையில் என்பதை ஆராயவே இம் மகாநாடு கூட்டப்பட்டிருக்கிறது. நாட்டுக்கும் மக்களுக்கும் நன்மை தரக்கூடிய வகையில் படங்கள் உருவாக படத்தொழிலில் ஈடுபட்டுள்ளவர்கள் முயல வேண்டும்" என்று அவர் கேட்டுக் கொண்டார்.

மகாநாட்டில் பல கருத்துக்கள் பரிமாறப்பட்டன. இவற்றை அடிப்படையாகக்கொண்டு, செய்ய வேண்டியதைப்பற்றி ஆராய்ந்து முடிவு செய்து, சர்க்காருக்கு அறிவிக்க ஒரு குழு அமைக்கவும் சென்னை சர்க்கார் முடிவு செய்திருக்கிறது.

இந்தியாவிலேயே இப்மாதிரி ஒரு மகாண சர்க்கார் படத்தொழிலில் அக்கறை காட்டுவது இதுவே முதல் தடவையாகும்.

ஜி. வரலக்ஷ்மி மணந்தார்

படவுலகைப் பரபரப்பிலாழ்த்தும் வகையில் நடிகை ஜி. வரலக்ஷ்மியின் திருமணச் செய்தி சென்ற மாதம் வந்தது. மல்யுத்த வீரரான அஜீத் சிங் என்பவரை வரலக்ஷ்மி மணந்து கொண்டார்.

வர்த்தக சபையின் சிபாரிசு

பிரதி வருஷமும் சிறந்த சினிமா நடிகர், நடிகை, கதாசிரியர் முதலியோருக்கு இந்திய சர்க்கார் பரிசு வழங்குவது வழக்கம். இதையொட்டி 1959-60 வருஷத்திற்கு

பரிசுபெற தமிழகத்தின் சிறந்த கதாசிரியர் என ஸ்ரீதரையும், நடிகரென சிவாஜி கணேசனையும் தென்னிந்திய பிலிம் வர்த்தகசபை தேர்ந்தெடுத்து, அவர்களது பெயரை இந்திய சர்க்காருக்குச் சிபாரிசு செய்திருக்கிறது.

தமிழ்ப் படங்களுக்கு அதிக வசூல்

இந்தியாவில் தயாராகும் படங்கள் பர்மா, மலேயா, இலங்கை தென்னாப்பிரிக்கா முதலிய பல இடங்களிலும் திரையிடப்பட்டு, தாய் நாட்டுக்கு அந்நியச் செலாவணியைப் பெருமளவில் பெற்றுத் தருகின்றன. இந்த வகையில் கடந்த ஆண்டு ஜனவரி முதல் செப்டம்பர் வரை, ஆக எட்டு மாதங்களில் சுமார் ஒன்னேகால் கோடி ரூபாயை இந்தப் படங்கள் வசூலித்திருக்கின்றன. கடந்த 1958 ஆண்டில் உள்ள வசூலைவிட இது மிகவும் அதிகம் என்பது குறிப்பிடத்தக்கது.

இதனால் சில அந்நிய நாடுகளில் இந்தியப்பட விழாக்களை ஏற்படுத்தவும் நமது சர்க்கார் முயன்று வருகிறது. விரைவிலேயே அங்காரா (துருக்கி), ஜாகார்த்தா (இந்தோனேஷியா), சிங்கப்பூர் ஆகிய இடங்களில் இவை நடத்தப்படும். இதையொட்டி சில படக்கலைஞர்களை அங்கு அனுப்பவும் சர்க்கார் திட்டமிட்டிருக்கிறது.

எச். எம். ரெட்டி

முதல் தமிழ்ப் படத்தை டைரக்ட் செய்தவரும், தென்னிந்தியாவில் படத்தொழிலை அங்குரார்ப்பணம் செய்வித்தவருமான பிரபல டைரக்டர் எச். எம். ரெட்டி சென்ற மாதம் 14-ம் தேதியன்று காலமான செய்தி கேட்டுப் பெரிதும் வருந்துகிறோம்.

எச்.எம். ரெட்டி 1923-ல், பம்பாய் கோஹினூர் படக்கம்பெனியில் உதவி டைரக்டராகச் சேர்ந்தார். இதன் பின்னர் சாரதா பிலிம் கம்பெனியில் சேர்ந்து சில மௌனப் படங்களை டைரக்ட் செய்தார். அந்தப் படங்களில், தற்போது பிரபலமாக விளங்குகின்ற, டைரக்டர் மெஹ்பூப், பிருதிவிராஜ், காலஞ்

தமிழ்ப் படவுலகில் பிரபலமடைந்துவரும் வி. ஆர். ராஜகோபால்-மனோரமா ஹாஸ்ய ஜோடி, 'உத்தமி பெற்ற ரத்தின'த்தில் நடித்து வருகிறது.

சென்ற மஸார்கான், யாகூப் முதலியோர் நடித்தார்கள் என்பதும் குறிப்பிடத்தக்கது.

1930-ல் தயாரான முதல் இந்திய 'பேசும் பட'மான ஆலம் ஆராவிற்கு துணை டைரக்டராக இவர் பணியாற்றினார். 1937-ல் முதல் தெலுங்குப் படமான 'பக்த பிரகலாதா'வை டைரக்ட் செய்தார் ரெட்டி. இதைத் தொடர்ந்து மறு வருஷம் அவர் முதல் தமிழ்ப் பேசும் படமான 'காளிதா'ஸை டைரக்ட் செய்தார்.

1937-ல் சென்னை திரும்பிய ரெட்டி ரோஹிணி பிக்சர்ஸ் ஸ்தாபனத்தை நிறுவினார். ஆரம்ப காலத்தில் இந்தக் கம்பெனியின் சார்பில் தயாரான சில படங்களில், பிரபல டைரக்டர் பிரசாத் நடித்துள்ளார்.

1951-ல் ரோஹிணி ஸ்டுடியோவை நிர்மாணித்தார். 1956-ல் அதன் பொறுப்பிலிருந்து ரெட்டி விலக, கோல்டன் ஸினி ஸ்டுடியோவாக



சர்வாணியின் "வெண்ணிலாவே நீ வாராய்" படத்தில் புதுமுகம் வேதராஜன் நடித்து வருகிறார்.

அது மாறியது. ரெட்டி இரண்டு முறை தென்னிந்திய பிலிம் வர்த்தக சபையின் தலைவராகத் தேர்ந்தெடுக்கப்பட்டுள்ளார்.

ரெட்டியின் மறைவினால் படவுலகம் ஒரு அனுபவஸ்தரை இழந்துவிட்டது.

நடிகர் சங்கம் பாராட்டு

உலகத்திலுள்ள பல்வேறு நாடுகளின் கூட்டுறவோடு, பாரீஸ் நகரில் 'யுனெஸ்கோ' என்ற ஸ்தாபனம் பணியாற்றி வருகிறது. கல்வி, கலாச்சாரம், விஞ்ஞானம் ஆகிய துறைகளில் பணியாற்றி வரும் இந்த ஸ்தாபனத்தில் சினிமாவுக்கென ஒரு தனிப்பிரிவும் இருக்கிறது. உலகத்திலுள்ள எல்லா நாடுகளையும் சினிமாவினால் இணைத்து, விஞ்ஞானம், கல்வி, கலாச்சாரம் இவற்றைப் பரப்ப இந்தப் பிரிவு பணியாற்றுகிறது. இதில், உலகில் பல்வேறு நாடுகளைச் சேர்ந்த தேர்ந்த கலைஞர்கள் பிரதிநிதித்துவம் வகித்து வருகிறார்கள். இந்த அடிப்படையில், முன்னணிக்கு வந்துகொண்டிருக்கும் இந்தியாவைப் பற்றி இந்த ஸ்தாபனத்திற்கு எடுத்துரைக்கவும், மற்ற நாடுகளுடன் அதன் கலாச்சாரப் பணியை இணைத்து வளர்க்கவும், ஆலோசனை கூறும் வகையில், நமது நாட்டின் கௌரவ ஆலோசகராக டைரக்டர் கே. சுப்ரமண்யம் நியமிக்கப்பட்டுள்ளார். இந்தியாவிலிருந்து ஒருவர் இம்மாதிரி அழைக்கப்பட்டு, நியமிக்கப்படுவது இதுவே முதல் தடவை; குறிப்பாக தமிழகத்திற்கே இது பெருமை.

இதையொட்டி டைரக்டர் சுப்ரமண்யம் அவர்களைப் பாராட்ட தென்னிந்திய நடிகர் சங்கம் ஒரு விழாவை, சென்னை வாணி மகாலில் ஏற்படுத்தியிருந்தது. சென்ற மாதம் 20-ம்தேதியன்று நடைபெற்ற இவ்விழாவுக்கு சென்னை நிதிமந்திரியும் கல்வி அமைச்சருமான சி. சுப்ரமண்யம் தலைமை வகித்தார். இந்தியாவின் ஸ்தானீகராக பாரிஸில் பணியாற்றி வரும் ராகவனும் வந்திருந்தார். சென்னையிலுள்ள பல சங்கங்களின் சார்பாகவும் நடிகர்களின் சார்பாகவும் கலைஞர்களின் சார்பாகவும் சுப்ரமண்யம் அவர்களுக்கு மாலைகள் அணிவிக்கப்பட்டன.

தலைமை வகித்த நிதிமந்திரி பேசுகையில், "டைரக்டர் சுப்ரமண்யம் அவர்கள் தாய்நாட்டுக்கு செய்யும் மற்றொரு பெரும்பணியாக இது அமையும் என நம்புவதாக"க் கூறினார்.

எம். ஜி. ஆர்., மற்றும் பலரும் டைரக்டர் சுப்ரமண்யத்தின் சேவைகளைப் பாராட்டி, அவரது இப்புதிய பதவி அவருக்கு பெயரும் புகழும், தாய்நாட்டுக்கு நன்மையும் பெற்றுத் தருமென வாழ்த்தினார்கள்.

டைரக்டர் சுப்ரமண்யம் பாராட்டுக்கு நன்றி தெரிவிக்கையில், தனக்கு அளிக்கப்பட்டிருக்கும் இப்புதிய பொறுப்பை நன்கு பயன்படுத்திக்கொண்டு படவுலகம் வளரப் பணியாற்றுவதாக உறுதி கூறினார்.

புதிய வெளியீடுகள்

இரும்புத் திரை

தயாரிப்பு : ஜெமினி

டைரக்ஷன் : எஸ். எஸ். வாஸன்

வெளியிட்டதேதி : 14-1-1960

நீளம் : 18,346 அடி

நடிகர்கள் : வைஜயந்திமாலா, சரோஜாதேவி, பண்டரிபாய், சிவாஜி கணேசன், ரங்காராவ், எஸ். வி. சுப்பய்யா முதலியோர்.

மோகனரங்கம் ஒரு மில் முதலாளி. அவர் சிறு வயதில் ஒரு பெண்ணைக் காதலித்து அவளுக்கு மாலையிடுகிறார். அவள் கருத்தரித்திருந்தும் பண ஆசை காரணமாக முதல் பெண்ணைக் கைவிட்டுவிட்டு மற்றொரு பெண்ணை மணக்கிறார். இருவருக்கும் இரு பெண்கள். இவர்களிருவரும் ஒருவரை யொருவர் இன்னாரென்று தெரியாமலேயே சேர்ந்து படிக்கிறார்கள்.

ஏழைப் பெண் ஜெயந்திக்கு மில்லிலேயே வேலை கிடைக்கிறது. இரு பெண்களும் ஒரே நபரைக் காதலிக்கின்றனர். ஜெயந்தி யாரென்று தெரிந்த மோகனரங்கம் அவளை ஒழித்துக் கட்டத் தீர்மானிக்கிறார். அவளும் தன் தகப்பனைப் பழிவாங்க முற்படுகிறாள். அவளது காதலன் மில்லிலேயே யூனியன் ஏற்படுத்தி முதலாளியின் அக்ரமச் செயல்களைக் கண்டித்து அவரைச் சீர்திருத்த முயலுகிறான். கடைசியில் வெற்றி பெறுகிறான். மோகனரங்கம் திருந்தி நல்லபடியாக மில்லை நடத்தத் தொடங்குகிறார்.

18,000 அடிகளுக்கும் மேற்கொண்டு ஓடும் இப்படக் கதை முதலாளி - தொழிலாளி உறவைச் சித்தரிக்கிறது. மில் முதலாளியாக நடிக்கும் ரங்காராவ் நடிப்பு முதல் தரமாக இருக்கிறது.

கல்யாணப் பெண்

தயாரிப்பு : ரிபப்ளிக் புரொடக்ஷன்ஸ்

டைரக்ஷன் : அறிவிக்கப்படவில்லை

வெளியிட்ட தேதி : 26-12-59

நீளம் : 15,982 அடி

நடிகர்கள் : அஞ்சலிதேவி, பி. சரோஜாதேவி, ஏ. நாகேஸ்வர ராவ் முதலியோர்.

ஒரு பெண்ணை மகனுக்குக் கலியாணம் செய்து வைக்க பெற்றோர்கள் அவனைப் பெண் வீட்டுக்கு அனுப்புகின்றனர். ஆனால் அவன் தன் சிநேகிதனை தனக்குப் பதிலாக அனுப்புகிறான். இதிலிருந்து விளையும் களேபரங்களைச் சித்தரிக்கிறது கல்யாணப் பெண் படக்கதை.

தமிழில் சபாஷ்மீனா ஏற்கனவே இதே தோரணையில் வெளிவந்து விட்டதால் தமிழ் ரஸிகர்களுக்கு பழகிப்போன கதையாகி விட்டது.

ஆரம்பத்தில் தலைப்புகளில் "சீனிவாஸ்," "சன்ந்திரா" போன்ற வார்த்தைகள் "தமிழில்" எழுதப்பட்டிருப்பது போலவே பட முழுவதும் "தமிழ்" ஒட்டப்பட்டிருக்கிறது!

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

தயாரிப்பு : கல்பனா கலாமந்திர்

டைரக்ஷன் : ஆர். ஆர். சந்திரன்

வெளியிட்ட தேதி : 31-12-59

நீளம் : 16,375 அடி

நடிகர்கள் : ஜமுனா, கண்ணாம்பா, எம். ஜி. ராமச்சந்திரன், தங்கவேலு முதலியோர்.

உழைப்பின் மேன்மை, ஜாதிப் பிரிவினையால் ஏற்படும் அநியாயம் மாங்கல்யம் பெண்களுக்குக் கொடுக்கும் பாதுகாப்பு போன்ற அருமை

அவர் காட்டும் இந்த அன்பு உண்மையானதாக இருக்குமா என்பது சந்தேகம்தான்! ஐரிஸ் மூவீஸ் படத்தில் தேவிகா - எம். ஆர். ராதா.

யான சில கருத்துக்களை அடிப்படையாகக் கொண்டு புனையப்பட்ட கதை இது.

கனகுவின் தகப்பனார் புதிய கருத்துக்களுக்கு மதிப்புத் தருபவர். தன் மகன் காதலிக்கும் கீழ்ச்சாதிப் பெண்ணைக் கலியாணம் செய்து கொள்ள மனப்பூர்வமாக ஆதரிக்கிறார். ஆனால் அவரது பொருளாதார நிலை இடம் கொடுப்பதில்லை. கனகுவுக்கு பெரும்பணம் சேரவிருக்கிறது என்பதை யறிந்த சுந்தர முதலியார் தன் பெண்ணை கனகுவுக்கு கலியாணம் செய்து வைக்க முடிவு செய்து வெற்றியும் பெறுகிறார். இதற்கிடையில் கனகுவுக்கும் கீழ்ச்சாதிப் பெண் என்று கருதப்படும் சுந்தரிக்கும் பதிவுத் திருமணம் நடைபெற்று விடுகிறது. அபவாதத்துக்குப் பயந்து சுந்தரியும் அவளது தாயாரும் வேற்றிடம் சென்று வாழ்கின்றனர். சுந்தரிக்கு ஏற்கனவே கலியாணம் ஆகி விட்டது என்பதை பறைசாற்றுவதற்கு ஒரு தாலியை தன் மகளுக்கு கட்டி வைக்கிறாள் அவளது தாய்.

சுந்தர முதலியார் தன் பெண்ணுக்கு கனகுவை கலியாணம் செய்து வைத்தும் அவர் திட்டங்கள் நிறைவேறுவதில்லை. கனகு ஒரு சீர்திருத்தவாதி. தன் சொத்துக்களை எல்லோருக்கும் வழங்கி விட்டு மாமனார் சூழ்ச்சியால் பைத்தியக்கார ஆஸ்பத்திரியை அடைகிறான் கனகு. சுந்தர முதலியாரின் மகளும் கார் விபத்தில் இறக்கிறாள். முதல் கலியாண ஜோடி கடைசியில் ஒன்று சேர்கின்றனர்.

கதையில் ஓரளவு பிடிப்பு இருந்த போதிலும் கையாளப்பட்ட முறையில் ஸ்வாரஸ்யம் குறைந்து விட்டது. எம்.ஜி.ஆர். நடித்து 1959 வருஷத்தில் ஒரு படம் வெளிவந்தது என்று சொல்லாம் என்பதற்காக

இப்படத்தை கடைசி நாளன்று வெளியிட்டிருக்கிறார்களோ என்று எண்ணத் தோன்றுகிறது. அவரது நடிப்பும் குறிப்பிடத்தக்கதாயில்லை.

தங்கைக்குப்பின் தமையன்

தயாரிப்பு : சூரியா பிலிம்ஸ்

கதை-வசனம் : சுப்பையா தேவர்

டைரக்ஷன் : ஜி. ஆர். ராவ்

வெளியிட்ட தேதி : 14-1-60

நீளம் : 15,014

நடிகர்கள் : டி. ஆர். மகாலிங்கம், கண்ணப்பா, பண்டரிபாய், காமினி முதலியோர்.

மரணத் தருவாயிலிருக்கும் ஜவுளி வியாபாரி சிவசண்முகம் பிள்ளை தன் மூத்த குமாரன் குணசீலன் விவசாயத்தைக் கவனிக்க வேண்டுமென்றும் தன் இளைய மகன் மதிவாணன் பர்மாவில் தன் ஜவுளி வியாபாரத்தைத் தொடர வேண்டுமென்றும் கேட்டுக் கொண்டு இறக்கிறார். அதற்கு முன், மதிவாணன் தொழிலில் நல்லபடி வளரும் வரை குணசீலன் மணக்கக் கூடாது என அவனிடம் உறுதி பெறுகிறார்.

பர்மா செல்லும் மதிவாணன் தில்லையம்பலம் என்ற கொடியவன் மூலம் ராணி என்ற தாசியின் வலையில் விழுந்து அடிக்கடி பணம் கேட்டு அண்ணனுக்கு எழுதி வரவழைத்து அதை அவளிடம் கொடுத்து விடுகிறான். குணசீலன் தந்தைக்குப்பின் தமையன் என்ற பொறுப்புடன் தம்பிக்காக எல்லாம் விற்று, வீட்டுக் கடனையும் அடைத்து விட்டு பர்மா செல்கிறான். அவன் காதலி சந்திராவும் அவனைத் தேடி பர்மா போகிறாள். அங்கே ராணி முன் அவமானப் படுத்தப்பட்டும் தம்பிக்காகக் கூலி வேலை செய்கிறான் குணசீலன். ராணி மதிவாணனை வெறுக்கவே சண்டை மூள்கிறது. தில்லையம்பலம் தன்னை ஏமாற்ற நினைத்த ராணியைச் சுட அந்தப் பழி மதிவாணன் மேல் விழுகிறது. நீதி ஸ்தலத்தில் சந்திரா உண்மையை நிரூபித்து இருவருக்கும் விடுதலை தேடித் தந்து குணசீலனை மணக்கிறாள். டைரக்டரின் கவனக் குறைவு படம் முழுவதும் வியாபித்திருக்கிறது.

விநாயக சதுர்த்தி

தயாரிப்பு : கலாநிதி பிலிம்ஸ்
டைரக்ஷன் : சமுத்ராலா
வசனம் : எஸ். ஏ. சுப்பராமன்
வெளியிட்ட தேதி : 27-12-59
நீளம் : 14,647 அடி

நடிகர்கள் : ஜமுனா, கிருஷ்ண குமாரி, என். டி. ராமராவ் முதலியோர்.

விநாயகப் பெருமானால் சாபமடைந்த சந்திரனை சதுர்த்தி யன்று பார்த்த கிருஷ்ணனுக்கு வீண் பழி ஏற்படுவதும், அதை நீங்குவதையும் படக் கதைச் சொல்லுகிறது. இந்தப் படத்தில் விநாயகரை விட கருஷ்ணனே அதிக இடம் பெற்றிருக்கிறார்.

'குமாரராஜா'வில் சந்திரபாபுபயப்படும் இந்தக் காட்சியில்கூட நாம் நிச்சயம் சிரிக்கத்தான் செய்வோம்.

உள்ளத்திலே தோன்றும் கள்ளத்தனத்தைக் கண்களிலே பிரதிபலிக்கும் இந்தக் குறும்புக்காரப் பெண்ணிடம் மாட்டிக்கொண்டு விழிப்பவர் யாரோ! மஹேஷ் பிக்சர்ஸ் "ரோட் நெ. 303" ஹிந்திப் படத்தில் அழகி ஹெலன்.

செய்திப் படங்கள்









எம். ஜி. ஆர். ஸ்தாபனத்தார் நடத்திய பொங்கல் விழாவில் மு. வரதராசனர் தலைமையில் அண்ணு, நெடுஞ்செழியன், கருணநிதி, ராமமூர்த்தி, எம். ஜி. ஆர். மற்றும் பலர் பேசினர்கள். விருந்தினர்களை வீரப்பன் வரவேற்றர். மேற்படி ஸ்தாபனத்தின் ஊழியர்கள், எம். ஜி. ஆர்., எம். ஜி. சக்கரபாணி, இவர்களுக்கு பொன்னுடையும், வீரப்பன், சாமி, கிருஷ்ண அய்யர் இவர்களுக்கு மாலையும் அணிவித்துக் கௌரவித்தார்கள்.

போட்டோக்கள்:
டி. ஐ. சந்தாமியான்



★ பி. சரோஜாதேவி பிறந்தநாள் விழாவில் பட முதலாளிகளும் நக்ஷத்திரங்களும் கலந்து கொண்டார்கள். சரோஜாதேவிக்குமாலை யிடுவது திருமதி சிவாஜி கணேசன்.

★ அமைச்சர் லூர்தம்மாள் அமெரிக்க நண்பர்களுடன் 'சகோதரி' படத்தைப் பார்வையிடுகிறார். சந்திரபாபு தன் நடிப்பைக் கண்டு மெய் மறந்திருக்கிறார்.

★ படத்தயாரிப்பில் சிரத்தைக் கொண்டவர்கள் ராஜாஜி ஹாலில் கூடினார்கள். நிதி மந்திரி தலைமை தாங்கினார்.



எம். ஜி. ஆர். பத்திரிகாசிரியர்களுக்கு அளித்த விருந்திற்கு தங்கவேலுவும் வந்திருந்தார். கீழே: பிரேம் நஸீர் புத்தாண்டு அன்று பத்திரிகாசிரியர்களுக்கு ஒரு விருந்து நடத்தினார்.



பொங்கல்திருநாளன்று தமிழ்ப் புலவர்களை தயாரிப்பாளர் ஏ. கே. வேலன் வரவேற்றார். கீழே: வேலன் அளித்த விருந்தில் புலவர் பெருமக்கள்.

திருமதி. இ. வி. சரோஜா ராமண்ணாவின் குழந்தை நளினியின் முதல் பிறந்த நாள் விழாவில் கலந்து கொண்ட விஜயகுமாரியும் சரஸாவும்.



விஜயகோபால் பிக்சர்ஸ் அகிலனின் ‘பாவை விளக்கு’க்கான வெளிப்புறக் காட்சிகள் டில்லியிலும் ஆக்ராவிலும் எடுக்கப்பட்டன. 1. சிவாஜி, ராஜம், கதாசிரியர் அகிலன், ஏ.பி.என்., சோமு முதலானோர். 2-3. டில்லி பாராளுமன்றம், ரயில்வே ஸ்டேஷன், முதலிய இடங்களில் நமது நடிகர்கள். 4. சோமு, தயாரிப்பாளர் விஜயரங்கம், கதாசிரியர் அகிலன், தயாரிப்பாளர் - ஒளிப்பதிவாளர் கோபன்னா, ஏ. பி. என்.



ஸ்ரீ ராம் புரொடக்ஷன்ஸாரின் 'ஜீவபூமி'’க்கான வெளிப்புறக்காட்சிகள் வட இந்தியாவில் எடுக்கப்பட்டன. 1. குலதெய்வம் ராஜகோபால், மனோரமா 2. சிவாஜி, சரோஜாதேவி 3. ஸ்டன்ட் சோமு, டி. கே. ராமச்சந்திரன், சாய்ராம் 4. சிவகாமி 5. ஏ. பி. என்., எம். ஆர். ராதா, சிவாஜி 6. ஸ்ரீராம் கோஷ்டியினர் 7. தில்லியில் கோமதியின் காதலன்’ நாடகத்திற்கு சிவாஜி தலைமை வகித்தார்.



இவர் நிற்கும் தோரணையையும் பார்வையையும் பார்த்தால், இவர்தான் "இரத்னபுரி இளவரசி"யை மணக்கப் போகிறவர் என்று தோன்றுகிறதே. ஆனால் இவர் பல விதத்திலும் கஷ்டப்பட்டுத்தான் அவளை அடைய முடியும். அந்தக் கஷ்டங்களுக்குப் பின் ஏற்பட்டிருக்கும் வெற்றிப் பெருமிதம் இவர் பார்வையிலே பிரதிபலிக்கிறதல்லவா? வினாயகா பிக்சர்ஸார் ஏராளமான பொருட் செலவில் தயாரித்திருக்கும் 'இரத்னபுரி இளவரசி'யில் டி. ஆர். மகாலிங்கம்.

ராசிக்காரரும் திறமை மிக்க இளைஞருமான ராமண்ணா டைரக்ஷனில் வளர்ந்திருக்கும் இப்படத்தில் எம். ஆர். ராதா, இ. வி. சரோஜா, மோஹனா, சந்தியா முதலியவர்களும் நடித்து வருகிறார்கள். நடனம், நடிப்பு, கவர்ச்சி, பிரம்மாண்டமான காட்சி ஜோடனைகள், அருமையான ஹாஸ்யம் முதலிய பலவும் கொண்ட இப்படம் விரைவில் வெளிவரவிருக்கிறது.



இந்தப் பெண் அலக்ஷியமாக நிற்கிறாள். அவர் அலக்ஷியமாக நிற்பதுபோல் நடிக்கிறார்! சரோடி பிரதர்ஸ் ''கலையரசி'' யில் இவர்களைக் காணலாம். இப்படம் விரைவில் வந்துவிடும்.

நம்பியார்

ராஜ்யஸ்ரீ

சிவாஜி கணேசன்

சாவித்திரி

இவர்கள் இருவரும் யாரையோ கேலி செய்கிருர்கள் போலிருக்கிறதே! இவர்கள் கைகொட்டிச் சிரிக்கும்படி என்ன நேர்ந்தது என்பதறிய மேகலாவின் ''குறவஞ்சி''யைப் பார்க்கவேண்டும்.



பிரேம் நவாஸ்

தனது சகோதரர் பிரேம் நசீரைத் தொடர்ந்து தமிழ்ப் படவுலகில் புகுந்திருக்கும் இவருக்கு முகவெட்டும் உடற்கட்டும் நடிப்புத் திறனும் உண்டு.


சபாஷ், கப்பல் துறை
தொழிலாளரே
இப்போது உங்களுக்கு
ஒரு கப் டீ தேவைதான்!
MADE IN INDIA
நான்தான் டீ -
உங்கள் வேலையில்
ஊக்கமளிக்க உத்தம
மான பானம்
TEA BOARD INDIA
PST-217

வெட்டுங்கள் / வெட்டுங்கள்

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

துரையப்பனும் கனகுவும் வண்டியில் போகிருர்கள். துரையப்பன் தலையில் ஒரு புரு உட்காருகிறது. அதைப் பார்த்து காவேரி தன் துப்பாக்கியால் புருவைக் சுடுகிருள். அதிர்ச்சி யடைந்து கீழே விழுகிருன் துரையப்பன். குறி தவறியிருந்தால் அவன் உயிருக்கே ஆபத்தாகி விட்டிருக்கும். அதுவும் ஓடுகிற வண்டியில் உள்ள எந்தப் பட்சியையும் யாரும் சுடமாட்டார்கள். ஹாஸ்யம் என்ற பெயரில் சேர்க்கப்பட்டிருக்கும் இக்காட்சி வெட்டப்பட வேண்டும்.

கே. வி. என்,
புத்தூர், திருச்சி.

அழகர்மலைக்கள்வன்

தேவர், இன்ஸ்பெக்டருடன் மலைக்குப் போயிருக்கும் ஜமீன் தாரைக் காணவேண்டி மலைமீது ஏறிச் செல்கிருர். மிக்க களைப் படைந்த அவர், அங்குள்ள பாறையில் மோதிக்கொண்டு விழுந்து விடுகிருர். இதனல் அவரது வலதுபுற நெற்றியில் அடிபட்டு விடுகிறது. ஆனல் அடுத்த காட்சியில் நாம் அவரைப் பார்க்கும்போது இடது நெற்றியில் பிளாஸ்திரி போடப் பட்டிருக்கிறது. இக்காட்சி வெட்டப் பட வேண்டும். இப்படிப்பட்ட குறைகள் பெரிதாகத் தெரிகின்றன.

வி. கோசன்,
வலம்புரி.

இவர் அவளைப் பார்க்கிருர். அவள்...? சுமுகம் பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்பில் டி. ஆர். மகாலிங்கம், ராஜசுலோசன.

இந்தப் படத்தைப் பார்த்ததும் 'காட்சிகண்காட்சியே' என்று பாடத் தோன்றுகிறதல்லவா? அஞ்சலி பிக்சர்ஸ் "அடுத்த வீட்டுப் பெண்" படத்தில் அஞ்சலி தேவி, எம். சரோஜா கோஷ்டியினர்.

சகோதரி

மீனா தன் தாய் வீட்டுக்குச் செல்கிறாள். மீனாவின் கணவன் வீட்டிலே தனித்திருக்கும்போது, பால்காரப் பெண் மீனா, வீட்டுக்கு வழக்கம்போல பால்போட வருகிறாள். அவள் நடையுடை பாவனைகளே அருவருப்பாக இருக்கின்றன. 'அய்ய, எசமானியம்மா இல்லை போலிருக்கு' என்று தனக்குள்ளேயே சொல்லிக்கொண்டு மீனாவின் கணவனைக் கள்ளத்தனமாகப் பார்க்கிறாள். நமக்கு வெறுப்பு தட்டுகிறது. உடனே அவள், "பாலை உள்ளே கொண்டு வந்து வைக்கட்டுமா?" என்று மீனாவின் கணவனிடம் கேட்டுக்கொண்டே உடம்பைக் கண்டபடி வளைத்து உள்ளே செல்கிறாள். பால் ஊற்ற வரும் பெண் இப்படியெல்லாம் கண்டபடி நடக்க முற்படுவாள் என்பதைக் காண வெட்கப்படுகிறோம் நாம். இக்காட்சியை உடனடியாக வெட்டிவிட வேண்டும்.

ஏ. ராயப்பன்,
கோபாலபுரம்.

ஸ்டூடியோ விஜயம்

ஐரிஸ் மூவீஸ் படத்தை உருவாக்கும் கலைஞர்கள்

சமீபத்தில் நரசு ஸ்டூடியோவுக்குப் போயிருந்தேன். ஐரிஸ் மூவிஸாரின் "புரொடக்ஷன்-1" படத்திற்காக ஒரு காட்சி படமாக்கப்பட்டது.

பொட்டல் தரையைச் சுத்தம் செய்து, ஒரு தகரக் கொட்டகை அமைத்து, ஒரு உலை இயக்கி எளிமையாக ஆரம்பித்த அந்த ஸ்தாபனம் பதினைந்து ஆண்டுகள் வளர்ச்சியில் இன்று மாபெரும் தொழிற்சாலையாக 'திருமூர்த்தி அலுமினிய பாக்டரி' என்ற பெயரில் இயங்கி வருகிறது.

திருவாசகம் அதன் முதலாளி. கண்ணாயிரம் அதன் மானேஜர். மருதமுத்து அதன் மேஸ்திரி. இம்மூவரும்தான் அதை அந்த நிலைக்கு வளர்த்தவர்கள். மேனாட்டுப் படிப்பை முடித்துவிட்டுத் திரும்பும் தன் மகன் செல்வராஜிடம் பாக்டரியின் பொறுப்பை ஒப்படைத்து விட்டு ஓய்வெடுத்துக் கொள்ளுகிறார் திருவாசகம். நாகரீகம் என்ற பெயரில் மனிதத் தன்மையையே இழந்துவிட்ட செல்வராஜின் கொடுமையைச் சகிக்க முடியாமல் மனம் வெந்து பொருமுகின்றனர் தொழிலாளிகள். கண்ணாயிரமும் மருத

சிட்டடெல் ஸ்டூடியோவில் ஆர். வி. பிக்சர்சாரின் முதல் தயாரிப்புக்கு ஆரம்ப பூஜை போடப்பட்ட போது எடுத்த படம்.



முத்துவும்கூட இதற்கு விதிவிலக்கல்ல.

கண்ணாயிரம், பருத முத்து இருவருடைய குடிசைகளும் இருப்பது தன் அந்தஸ்துக்குக் குறைவாக இருப்பதால் அவற்றை நீக்கி அங்கே டென்னிஸ் மைதானமும் குதிரை லாயமும் அமைக்க வேண்டும் என்கிறான் செல்வராஜ். இது சம்பவத்தின் ஆரம்பம். வாருங்கள், படப்பிடிப்பைப் பார்க்கலாம்.



இலங்கையில் வளரும் "பிரிமியெக் நிசா" சிங்களப் படத்தின் வெளிப்புறக்காட்சி படமாக்கப் படும் போது எடுத்தபடம். இடமிருந்து வலமாக: எல். எம். பெரேரா, ஸ்ரீமதி ராசரதி, டைரக்டர் சோமசேகரன், ஒளிப்பதிவாளர் டி. ஒய். எம். ஸ்வாமி.

"உங்கள் பக்கத்தில் குதிரைகள் குடியிருக்கலாம். என்னைப் போன்ற மனிதர்கள் குடியிருக்கக்கூடாது, அப்படித்தானே? ஆரம்ப காலத்தில் நாங்கள் மூவரும் எப்படியிருந்தோம், எப்படி இந்த பாக்டரியை ஆரம்பித்தோம் என்று உங்களுக்குத் தெரியாவிட்டாலும் உங்கள் தகப்பனாரைக் கேட்டுத் தெரிந்து கொள்ளுங்கள். எந்த அந்தஸ்தைக் காட்டி எங்கள் குடிசைகளைக் காலி செய்யச் சொல்கிறீர்களோ அந்த அந்தஸ்தை உங்களுக்குத் தேடித் தந்தவர்கள் நாங்க தம்பி...நாங்க" என்று உணர்ச்சிகளைப் பேச்சாக்கிக் கொட்டுகிறான், உழைப்பாளி மருதமுத்து.

படிப்பினால் மமதை கொண்டு மதியிழந்து விட்ட செல்வராஜ் பளீரென்று பருதமுத்துவின் கன்னத்திலறைந்து விடுகிறான். கண்ணாயிரம் அவனைத் தேற்றி அழைத்துச் செல்கிறார்.

இந்தக் காட்சியில் செல்வராஜாக எம். ஆர். ராதாவும், கண்ணாயிரமாக கே. சாரங்கபாணியும் பருத முத்துவாக முத்தையாவும் நடித்தார்கள். திருவாசகமாக எஸ். வி. ரங்கராவ் நடிக்கும் இப்படத்தில் மற்றும் டி. எஸ். துரைராஜ், பி. எஸ். சரோஜா, பி. எஸ். ஞானம், தேவிகா முதலியோரும் நடித்துவருகிறார்கள். சோலைமலை கதை-வசனம் எழுத, தட்சிணாமூர்த்தி இசையமைக்கிறார். ராமமூர்த்தி ஒளிப்பதிவாளராக இருக்கும் இந்தப் படத்தை ஜி. ராமகிருஷ்ணன் டைரக்ட் செய்து வருகிறார். நரசுவில் இது வளருகிறது.

* * *

அது ஒரு அழகிய தோட்டம். அங்கே ஆசிரமத்து சூழ்நிலை பிரதிபலித்தது. வனப்பிரதேசத்திலே தன்னிச்சையாகத் துள்ளித் திரியும் மான் கூட்டத்தைப்போல, பருவப் பெண்கள் துள்ளி விளையாடிய அந்தக் காட்சியை ஒரு முனிபுங்கவர் கண்டிருந்தால் அவரது துள்ளாத மனமும் துள்ளும் என்பதும் நிச்சயம்!

அந்த இடத்தின் குளிர்ச்சியை அனுபவித்த என் கண்களிடம் என் செவிகளுக்குப் பொறாமை ஏற்பட்டது. ஆனால் அது நீடிக்கவில்லை. கண்ணுக்கினிய காட்சியைத் தொடர்ந்து செவிக்கினிய கானம் கேட்டது. அவர்கள் எல்லோரும்

ஸ்டுடியோ வில் வாசு பிலிம்ஸாரின் ''கைராசி'' படத்திற்காகச்சென்ற மாத மத்தியில் இந்தக் காட்சி படமாக்கப்பட்டது. தயாரிப்பாளர் வாசுமேனன் அவர்களிடம் காட்சியின் விவரம் கேட்டேன்.

சுமுகம் பிக்சர்ஸாரின் முதல் படத்தின் ஆரம்பவிழாவன்று எதிராஜுலு நாயுடு காமிராவை இயக்கி வைத்தார்.

அவளும் அவளது தோழிகளும் நர்ஸ் உத்தி யோகம் பார்த்து வருகிருர்கள். கிராமங்களில் சேவை செய்வதற்காக அவர்கள் அடிக்கடி செல்கிருர்கள். அந்தக் கிராமத்தில் அவர்கள் தங்கியிருக்கும்போது அவள்-அதுதான் அந்தப் பேரழகி ஒரு யுவனைச் சந்திக்கிருள்; காதல் கொள்ளுகிருள். மற்ற யுவதிகளுக்கு எப்படியிருக்கும்? அவர்கள் கிராமத்து வைத்திய விடுதித் தோட்டத்தில் அவளைக் கேலிசெய்து ஆடிப் பாடுகிருர்கள். சரோஜாதேவிதான் கேலி செய்யப்பட்ட நர்ஸ். கேலிசெய்த இருவர் நெருங்கிய தோழிகள். கே. சங்கர் டைரக்ஷனில் வளரும் இந்தப்படம் மிகவிரைவில் திரைக்கு வரவிருக்கிறது.

* * *

அவன் ஒரு மில் தொழிலாளி. கடுமையாக உழைக்கும் அவன், தன் கூடப்பிறந்த தங்கையிடம் உயிரையே வைத்திருக்கிருன். எதற்குமே அஞ்சாத திட நெஞ்சமுடைய அவன் தன் தங்கைக்கு ஏதாவது என்ருல் மனம் கலங்கிப்போய் விடுவான். வாழ் நாளெல்லாம் அவள் சிரித்துக் கொண்டே இருக்க வேண்டும். அவள் மகிழ்ச்சியோடிருப்பதற்காகத் தனக்கு என்ன கஷ்டம் வந்தா

நர்ஸ் உடையில் இருந்தார்கள். நக்ஷத்திரக் கூட்டத்தின் நடுவே குளிர்நிலவு பொழியும் சந்திரன் ஒளிவிடுவதுபோல அந்த யுவதிகளின் நடுவே ஒரு பேரழகி நின்றிருந்தாள். அவர்கள் பாட ஆரம்பித்தார்கள். அவள் பொய்க்கோபம் கொண்டாள். அவர்கள் சொல்வது சரி; ஆனல் கேலி செய்வது சரியல்ல என்று,சொல்லாமல் சொல்லி நின்ற அவளிடம் அவர்கள் வேண்டுமென்றே கேலி செய்து பாடி ஆடினுர்கள். அவர்களில் இருவர் மிகவும் பொல்லாதவர்கள் போலும்! ஒரு வேளை பொருமையும் கொண்டனரோ! அவளை நெருங்கி வந்து அவ்விரு அழகிகளும் ஆடிக் கொண்டே பாட ஆரம்பித்தனர்.

கண்ணுக்குள்ளே மயக்கம்வர
என்னத்தைச் சொன்னுரு?
கனி இதழில் காயம்வர
என்னடி செஞ்சாரு?
நினைச்சுப் பார்த்து ரசிப்பதற்கு
என்னடி தந்தாரு?

இருவரும் இரண்டு பக்கமும் நின்று இப்படிப் பாடும்போது அவள் முகம் வெட்கத்தால் சிவந்ததைப் பார்க்க வேண்டுமே!

விஷயத்தை விவரமாகச் சொல்லி விடுகிறேனே. வாஹினி - விஜயா

லும் ஏற்கத் தயார் என்ற அளவிலே வாழ்ந்து வருகிறுன்.

அன்றும் வழக்கம்போல் மில்லிலே கடுமையாக உழைத்து விட்டுத் திரும்பி வருகிறுன் அவன். அன்புத் தங்கை ஆவலோடு எதிர்கொண்டழைப்பாள் என்கிற மகிழ்ச்சியில் களைப்பே அறியாதவனுக வீட்டுக்கு வருகிறுன்.

அவன் எதிர்பார்த்ததைப் போல் அவளும் அண்ணனை ஆசையோடு வரவேற்கிருள். இளமையும் அழகும் கொண்ட ஆசைத்தங்கையை அன்புடன் பார்க்கும் அவன் முகம் மாறி விடுகிறது. திடுக்கிடுகிறுன். கையில் அவள் கட்டு போட்டுக் கொண்டிருக்கிருள். தவித்துப்போய் காரணம் கேட்கிறுன் அவன். அவளுக்குச் சிரிப்புத்தான் வருகிறது. தன் அண்ணனுக்குத்தான் தன்னிடம் எவ்வளவு ஆசை? அவன் மனத்திகிலை அகற்ற முற்படுகிருள். ''நம்ம மாடு முட்டி விட்டதண்ணு. பெரிய காயம் ஒன்றுமில்லை'' என்று கூறுகிருள். அவன் மனம் கொஞ்சம் தெளிவடைகிறது. ''அப்பாடா' என்று பெருமூச்சு விடுகிறுன்.

நெப்டியூன் ஸ்டுடியோவில் சமீபத்தில் ராஜாமணி பிக்சர்ஸாரின் முதல் தயாரிப்புக்காக இந்தக் காட்சி படமாக்கப்பட்டது. ஆசை அண்ணனுக சிவாஜி கணேசனும் அருமைத் தங்கையாக சாவித்திரியும் நடித்தார்கள். கொட்டாரக்கரா எழுதிய இந்தக் கதைக்கு ஆரூர் தாஸ் வசனம் எழுதி யிருக்கிருர். பீம்சிங் டைரக்‌ஷனில் இப்படம் வளர்ந்து வருகிறது.

* * *

அதே ஸ்டுடியோவில் ஒருநாள் சிவாஜி கணேசனும் சாவித்திரியும் குறவன்,குறத்தி வேடங்களில் நடனமாடினுர்கள். அசல் குறவர்கள் கூட இவ்வளவு நன்ருக ஆடுவார்களா என்பதும் சந்தேகம்தான். அது ஒரு வீதிக் காட்சி. இந்தக் குற ஜோடியின் ஆட்டத்தை ரசிக்கப் பெருங் கூட்டம் கூடி விடுகிறது. குறவனும் குறத்தியும் ஏதோ பாடிக் கொண்டிருந்தார்களே தவிர, அவர்கள் கவனமெல்லாம் வேறெங்கோ இருந்தது. குறிப்பாகச் சொன்னுல் இருவரும் அங்குள்ளோரைத் தம் பார்வையால் எடை போட்டுக் கொண்டிருந்தனர். அப்படியானுல் அவர்கள் நிஜக் குறவர்களில்லையா? பிறகுதான் விவரம் தெரிந்து கொண்டேன்.

அவள் ஒரு இளவரசி. அவன் அவளது காதலன். இருவரும் துப்பறியப் புகுந்து இப்படி யெல்லாம் மாறுவேடம் போடுகிருர்கள். ''கல்லையும் புல்லையும்'' என்ற பாடலுக்கு வாயசைத்து கணேசனும் சாவித்திரியும் ஆடினுர்கள். பின்னணியில் சிதம்பரம் ஜெயராமனும் பி. லீலாவும் பாடியிருக்கிருர்கள். மேகலாவின் ''குறவஞ்சி''யில் இந்தக் காட்சி வருகிறது. ஏ. காசிலிங்கம் டைரக்‌ஷனில் வளரும் ''குறவஞ்சி'' யின் கதை - வசனங்களை கலைஞர் மு. கருணுநிதி எழுதியிருக்கிருர். சிவாஜி கணேசன், சாவித்திரி, ஓ. ஏ. கே. தேவர், குலதெய்வம் ராஜ கோபால், சுசீலா, வனஜா, ராஜா வஹாப் காஷ்மீரி முதலியோர் நடித்து வரும் இந்தப் பிரம்மாண்ட தயாரிப்பு இம்மாதம் திரையிடப்பட விருக்கிறது.

* * *

அருணுசலம் ஸ்டுடியோவில் அருள் நந்தியின் கானம் இருக்கிறது என்ற செய்தி வந்தது. அங்கே சென்றபோது டி. ஆர். மகாலிங்கம் அற்புதமாகப் பாடிக்கொண்டிருந்தார். ''தாய்மகளுக்குக் கட்டிய தாலி'' படத்தைத் திரையிட்ட சூட்டோடு கல்பனு கலாமந்திர் ஆர். ஆர். சந்திரன் ''நந்திவர்மன்'' வரலாற்றுப் படத்தை ஆரம்பித்து விட்டிருக்கிருர். இந்தப் படத்தில் அருள் நந்தியாக நடிக்கும் மகாலிங்கம் பாடிய பாடல்தான் அன்று ஒலிப் பதிவு செய்யப்பட்டது. கே. டி. சந்தானம் இயற்றி, டி. ஆர். பாப்பா இசையமைத்து, டி. ஆர். மகாலிங்கம் பாடிய பாடலை ஈ. ஐ. ஜீவா ஒலிப்பதிவு செய்தார்.

DA 59/424

சொற்ப வருமானம்
அதிகரித்த தேவைகள்
எவ்விதம் சேமிப்பது?

மிகவும் சிரமந்தான். ஆனால் இதற்கு ஒரு சுலபமான வழி இருக்கிறது. நீங்களே இதை நிரூபிக்கலாம். பகுத்தறிவுடன் உங்கள் மாதாந்திர வரவு செலவுக் கணக்கை தயாரியுங்கள். தேவையற்ற செலவுகளை தவிருங்கள். உங்களால் முடிந்ததை தவறாமல், சேமிக்கத் தொடங்குங்கள். ஆண்டுகள் செல்லச் செல்ல உங்கள் சேமிப்பு எவ்வளவு பெருகி உங்கள் தேவைகளை நிறைவேற்றுகிறது என்பதை அறிவீர்கள்.

வளரும்

மாதச் சேமிப்புத்

திட்டம்

உங்கள் தேவைக்கு உகந்தது

(விவரங்கள்
எந்த தபால் நிலையத்திலும்)

சேமித்து இந்தியாவின் வருங்காலத்திற்கு
முதலீடு செய்யுங்கள்

தேசீய சேமிப்பு ஸ்தாபனம்



வாழ்க்கையில் இனிக்கும்படியான சம்பவங்கள் பல வருவதுண்டு. அவை மீண்டும் வருமா என்பது சந்தேகம்தான். தங்கள் வாழ்க்கையில் நேர்ந்த அப்படிப்பட்ட சம்பவங்களைப் பற்றி இங்கே அசோகன், பிரேம் நசீர், சந்திரகாந்தா, கோபாலகிருஷ்ணன் ஆகிய நால்வரும் சொல்லுகிருர்கள்.

நெஞ்சம் விட்டு நீங்கா நினைவு

MDR

பிரேம் நசீர்

கேரளத்தில் உள்ள சிரயன்கல் என்ற தாலுக்காவில் உயர்நிலைப் பள்ளியில் நான் படித்து வந்தேன். பிரதி வருஷமும் மாணவர்களுக்கென்று ஒரு சொற்பொழிவுப் போட்டி நடக்கும். பல்வேறு உயர்நிலைப் பள்ளியிலிருந்து மாணவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு இதற்கு அனுப்பப்படுவார்கள். தேர்ந்தெடுக்கப்படும் மாணவனுக்குப் பரிசு வழங்குவார்கள். இதை வாங்கிய பள்ளிக்கும் பெருமை அதிகமாகி விடும்.

நான் நான்காம் படிவம் படித்து வந்த சமயம் அது. இதேபோல் சொற்பொழிவுப் போட்டி ஏற்பாடு செய்யப்பட்டது. என் பள்ளியின் சார்பில் என்னைக் கலந்து கொள்ளும்படி என் நண்பர்கள் வற்புறுத்தினார்கள். நான் எவ்வளவோ மறுத்தும், எனக்குத் தெரியாமலேயே என் பெயரைப் போட்டிக்குக் கொடுத்து விட்டார்கள்.

நான் வெற்றி பெறுவேன் என்பது அவர்கள் நம்பிக்கை! எனக்கோ வெற்றி பெறுவேன் என்ற நம்பிக்கை இல்லாதது மட்டுமல்ல, போட்டியில் கலந்து கொள்வதற்கும் கூச்சமாக இருந்தது!

அந்த வருஷம் அட்டிங்கல் என்ற இடத்தில் இப்போட்டி நடந்தது.

முதலில் பள்ளியிலேயே ஒரு போட்டி நடந்தது. இதில் வெற்றி பெற்றால்தான், பள்ளியின் சார்பில் என்னை அனுப்பி வைப்பார்கள். பள்ளியில் ஒரு வேடிக்கை நடந்தது.

எனக்கும், மற்றொரு மாணவனுக்கும் ஒரே மார்க்குகள் கிடைத்தன. ''இருவரில் யாரை அனுப்புவது?'' என்ற பிரச்னை வந்து விட்டது.

''இந்த மட்டிலுமாவது என்னை நிறுத்திவிட்டு, அவனை அனுப்பி வையுங்கள்'' என்று நான் யோசனை தெரிவித்தேன்.

''அதெல்லாம் முடியாது. பூவா தலையா போட்டுப் பார்த்து நிச்சயித்து விடுவோம்'' என்று சொல்லி, ஒரு நாணயத்தைச் சுண்டி விட்டார்கள் நண்பர்கள்.

இங்கே கூடவா எனக்குச் சோதனை ஏற்படவேண்டும்?

என் பக்கமே நாணயமும் வந்து விழுந்தது. அட்டிங்கலுக்கு நான் அனுப்பப்பட்டேன், என் பள்ளியின் சார்பில்!

என்னைப்போல் ஒவ்வொரு பள்ளியிலிருந்தும் தேர்ந்தெடுக்கப்பட்டு, சுமார் நாற்பது மாணவர்கள் அட்டிங்கலில் கூடியிருந்தார்கள். அத்தனை நபர்களையும் பார்த்த எனக்கு, இருந்த சிறிதளவு நம்பிக்கையும் தகர்ந்து போய் விட்டது!

''என் நினைவில் நிலைத்து நிற்பது பள்ளியில் நான் பரிசு பெற்ற தினம்தான்'' என்கிறார் பிரேம்நசீர்.

அங்கே போட்டி எப்படி நடந்தது என்பதை விவரித்து விடுகிறேன்.

முதலில் எங்கள் அனைவரையும் ஒரு அறையில் விட்டுப் பூட்டி விட்டார்கள். நாங்கள் இருந்த அறைக்கு வெகு தூரத்தில் - அங்கு யார் எவ்வளவு உரக்கப் பேசினாலும் எங்களுக்குக் கேட்காது-ஒரு பெரிய கூடம் இருந்தது. அங்கேதான் போட்டி நடந்தது. போட்டி சரியாக மாலை ஐந்து மணிக்கு ஆரம்பிக்கப்பட்டது. அறையிலிருந்து ஒவ்வொரு மாணவனாக அழைக்கப்பட்டு, அவன் பேசவேண்டிய விஷயத்தைச் சொல்லி அனுப்புவார்கள். அவன் அந்தக்கூட்டத்தில் பேசவேண்டும். ஒவ்வொருவருக்கும் இருபது நிமிஷங்கள் கொடுக்கப்பட்டன.

திருவாங்கூர் சமஸ்தானத்தின் கல்வி இலாகா டைரக்டரான திரு. பணிக்கர் நீதிபதியாக இருந்தார்.

என் முறை வந்தது. நான் போய் பேசிவிட்டு வந்தேன்.

'முடிவு என்ன ஆகுமோ?' என்று எண்ணிக்கொண்டே உட்கார்ந்திருந்தேன். இரவு ஒன்பது மணிக்குப் போட்டி முடிந்தது.

போட்டியில் வெற்றி பெற்றவனாக எனது பெயர் அறிவிக்கப்பட்டபோது என்னால் நம்பவே முடியவில்லை!

எனக்கு ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையையும் பரிசாகத் தந்தார்கள். எங்கள் பள்ளியிலே எனக்கு கிடைத்த பாராட்டுதல்கள் சொல்லி முடியாது!

நான் பரிசு பெற்ற அந்தக் கோப்பை என் வீட்டில் இன்று அந்த 'இன்ப நினைவின் சின்னமாக' கம்பீரமாக வீற்றிருக்கிறது!

அசோகன்

என் வாழ்நாளில் அன்றும் இன்றும் இனிய நினைவாக—நெஞ்சை விட்டு நீங்காத நினைவாக—இருப்பவை இரண்டே இரண்டு சம்பவங்கள்தான். என் கல்லூரி நாட்களில் அடுத்தடுத்து நிகழ்ந்த இவை இன்றும் என் மனதிலே இன்ப அலைகளை எழுப்பிக் கொண்டே இருக்கின்றன.

திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியில் பி. ஏ. வகுப்பில் முதலாவது ஆண்டு படித்துக் கொண்டிருந்த சமயம் அது.

'தமிழ்த் தாத்தா' உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் நினைவாகப் பேச்சுப் போட்டி ஒன்று வருஷா வருஷம் நடைபெறும். தமிழகத்தின் 'கேம்பிரிட்ஜ்' (லண்டனில்

உ. வே. சாமிநாத அய்யர் போட்டியில் தங்கப் பதக்கம் பரிசு பெற்ற நடிகர் அசோகன்.

தேம்ஸ் நதியின் கரையில் அமைந்துள்ள மிகப் பிரபலமான கல்லூரி இது) என்று இது புகழப்படும். கும்பகோணத்தில் காவேரியின் கரையில் அமைந்திருக்கும் அரசாங்கக் கல்லூரியில் இந்தப் போட்டி நடைபெறும்.

கல்லூரியில் நான் ஒழுங்காகப் படித்து வந்தேன். தவிர, எனக்கு தமிழ் இலக்கியங்களிலும் ஓரளவுக்கு ஈடுபாடு உண்டு. எனவே நான் படித்துவந்த செயிண்ட் ஜோசப் கல்லூரியின் தமிழ்ப் பேராசிரியரான திரு. ஐயம்பெருமாள் கோனார் அவர்களும், கல்லூரியின் தமிழ்ப் பேரவை மாணவர் கழகக் காரியதரிசியான திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் (தற்போது இவர் நாகப்பட்டினத்தில் வழக்கறிஞராக இருக்கிறார்) என்னை இப்போட்டியில் கலந்து கொள்ளும்படிச் சொன்னார்கள். அவர்கள் தந்த ஊக்கத்தினால் நான் போட்டியில் கலந்து கொள்ளச் சம்மதித்தேன்.

உ. வே. சாமிநாத அய்யர் போட்டியில் கலந்து கொள்வதென்பதே ஒரு பெருமை. அதில் வெற்றி பெற்று விட்டால்?...தமிழகத்திலே தனிப்பெருமைதான்!

இத்தகைய போட்டியில் கலந்து கொள்வதென்பது சுலபமாகி விடுமா? பல கடுமையான போட்டிகளில் பரிசோதிக்கப்பட்டு, வெற்றி பெற்றால்தான் இந்தப் போட்டிக்கு அனுப்பப்படுவார்கள்.

நான் படித்த கல்லூரியில் இருபத்தைந்து பேர்கள் இதில் கலந்து கொண்டார்கள். எங்களில் சிறந்தவரைத் தேர்ந்தெடுக்க, எங்கள் கல்லூரியிலேயே ஒரு போட்டி வைக்கப்பட்டது. 'மொழிவாரி மாகாணம்' என்ற தலைப்பில் பேசியவர்களுள் என் கல்லூரி சார்பில் நான் தேர்ந்தெடுக்கப்பட்டேன்.

''பயப்படாதே! ஆரம்பமே வெற்றி உனக்கு'' என்று திரு. கோனார் அவர்களும் திரு. கல்யாணசுந்தரம் அவர்களும் பாராட்டினார்கள்.

அடுத்து திருச்சி நகரத்திலிருந்த கல்லூரிகளுக்குள் ஒரு போட்டி





என்.எஸ்.கே. யினால் சிறந்த சிரிப்பு நடிகர் எனப் பாராட்டப்பட்டுப் பரிசு வழங்கப்பட்ட வி. கோபாலகிருஷ்ணன்.

வைக்கப்பட்டது. 'சர்வாதிகாரம்' என்ற தலைப்பில் எங்களைப் பேச வைத்ததில், நான் முதல்வனாக தேர்ந்தெடுக்கப்பட்டு திருச்சி மாணவர்களின் பிரதிநிதியாக்கப்பட்டேன்.

திருச்சியின் சார்பில் கும்பகோணத்திற்குப் புறப்பட்டேன்.

நான் இயல்பாகவே எல்லோருடனும் சகஜமாகப் பேசிப் பழகுவேன். ஓய்வு இருக்கும் சமயத்தில் பாடவும் செய்வேன். நான் கும்பகோணம் ஹாஸ்டலில், போட்டியில் கலந்து கொள்ள வந்தபோது, அங்குள்ள மாணவர்களுடன் சகஜமாக ஆடிப் பாடிப் பழகியது, என்னை ஓரளவுக்கு அவர்களுக்கிடையே பிரபலமாக்கி விட்டது.

கும்பகோணத்தில் உ. வே. சாமிநாத அய்யர் போட்டியில் கலந்து கொள்வதற்காக மொத்தம் பனிரெண்டு மாவட்டங்களைச் சேர்ந்த முப்பத்தைந்து கல்லூரிகளிலிருந்து மாணவர்கள் வந்திருந்தார்கள். இந்தப் போட்டியில் ஒருவர் ஒரே முறைதான் கலந்து கொள்ள முடியும். அவர் வெற்றியை அடைந்தாலும், தோல்வியைத் தழுவினாலும் அதற்கு மேல் அவர் கலந்து கொள்ளவே முடியாது. இதிலிருந்து இப்போட்டி எவ்வளவு கடினமானது என்பதை யூகித்துக் கொள்ளலாம்.

'தமிழ் வளர்ச்சி' என்ற தலைப்பைக் கொடுத்து எங்களை அங்கு பேச வைத்தார்கள்.

நான் மேடையில் தோன்றியவுடனே மாணவர்கள் கைத்தட்ட ஆரம்பித்து விட்டார்கள். இதுவே எனக்குப் புது உற்சாகத்தைக் கொடுத்தது.

இந்தப் போட்டியில் நான் முதல் பரிசு பெற்றேன். ஒரு பெரிய தங்கப் பதக்கமும், கைக்கடிகாரமும் எனக்குக் கொடுத்தார்கள். பரிசு பெற்றதும் என்னை மீண்டும் மேடை ஏற்றிப் பேசவைத்தார்கள். தவிர, அங்குள்ள மாணவர்கள் கும்பகோணம் கல்லூரியைச் சுற்றிக் காட்டி, ஒரு விருந்தும் வைத்தார்கள்.

திருச்சி செயிண்ட் ஜோசப் கல்லூரியிலும் என்னைப் பாராட்டினார்கள். திரு. ஐயம்பெருமாள் கோனார் அவர்களும், தமிழ்ப் பேரவைக் கழகக் காரியதரிசி திரு. கல்யாண சுந்தரம் அவர்களும் என்னை அப்படியே தழுவிக் கொண்டார்கள்.

''எங்கள் எண்ணத்தை நிறைவேற்றி விட்டாய்'' என்று அந்தப் பெரியவர்கள் என்னை வாழ்த்திய போது நான் மகிழ்ச்சியின் எல்லையை மிதித்தேன்.

அடுத்து மறுவருஷமே எனக்கு மற்றொரு சோதனை வந்தது.

இந்தப் போட்டியும் கடுமையான சொற்பொழிவுப் போட்டி.

இந்தியா பூராவும் உள்ள கல்லூரிகளில் படித்து வரும் தமிழ் மாணவர்களுக்கிடையே இந்தப் போட்டி ஏற்பாடு செய்யப்படும். ஒவ்வொரு மாவட்டத்திற்கும் ஒவ்வொரு மாணவன் வீதம் தேர்ந்தெடுக்கப்பட்டு அனுப்பப்படுவார்கள்.

இந்தப் போட்டியில் முந்திய வருஷம் வெற்றி பெற்ற நமச்சிவாயம் என்பவர் கலந்து கொண்டார். திருநெல்வேலி மாவட்ட கல்லூரிகளிலே நிரம்ப செல்வாக்கு பெற்றவர் அவர். திருச்சியிலிருந்து நான் வந்திருப்பதைக்கேள்விப்பட்டஅவர் சந்தோஷம் அடைந்தார். இதே போட்டியில் கலந்து கொண்ட திருமதி டி. என். அனந்தநாயகி (காங்கிரஸ் கட்சியின் பேச்சாளர்களில் ஒருவர்) ஆரம்ப நிலையிலேயே தோல்வியுற்று விட்டார்.

இந்தப் போட்டியில் வெற்றி பெறுபவர்களுக்கு எம். ஏ. வரை படிக்கவோ, மேனாட்டுப் படிப்புக்குச் செல்லவோ சர்க்காரே சுமார் ஐயாயிரம் ரூபாய் சம்பளமாகத் தருவதுடன் ஒரு நற்சாட்சிப் பத்திரமும் தருவார்கள்.

இந்தப் போட்டியிலும் நான் எதிர்பாராத வகையில் முதற்பரிசு பெற்றேன்

எங்கள் கல்லூரியில் இதற்காக ஒரு பெரிய பாராட்டு மீண்டும் நடந்தது.

“தமிழ் நாட்டிலேயே இந்த இரண்டு போட்டிகளிலும் வெற்றி பெறுவது கடினம். அதிலும் இரண்டு போட்டிகளிலும் முதல் பரிசு வாங்குவது மிகவும் சிரமம். அப்படி இரண்டையும் வாங்கிய முதல் மாணவன் அசோகன் தான்” என்று அன்று சொன்னபோது என் உள்ளம் மகிழ்ச்சியில் திளைத்தது.

ஆனால் சென்னைக்கு நான் கலையுலகில் ஈடுபட வந்தபோது உ. வே. சாமிநாத அய்யர் அவர்கள் போட்டியில் வழங்கப்பட்ட தங்கப் பதக்கம் திருடு போய் விட்டது! இது என் வாழ்க்கையிலேயே ஆறாத துயரத்தை ஏற்படுத்தி விட்டது.

ஆயினும் ஒவ்வொரு சமயம் நான் உட்கார்ந்து சிந்திக்கும்போது இந்த இரண்டு சம்பவங்களும் தான் எனக்கு முதலில் நினைவுக்கு வரும். இந்த இன்ப நினைவுகளை எண்ணி எண்ணி நான் பெருமூச்சு விடுவேன். இனி எப்படி வரும் அத்தகைய இனிய நிகழ்ச்சிகள்?

“காந்தா என்ற என் பெயரையே மாற்றி அமைத்து விட்டது ஒரு சம்பவம். அதுதான் என் நினைவில் என்றும் நிற்கிறது” — சந்திரகாந்தா.

கோபாலகிருஷ்ணன்

என் அறையிலே நான் உட்கார்ந்திருந்தேன். என்னைச் சுற்றிலும் கண்ணாடி பிரோக்கள். அவற்றில் நாடகக் கலை, மற்றும் பலதரப்பட்ட விஷயங்களைப் பற்றி ஏராளமான புத்தகங்கள் இருக்கின்றன. இவை எனக்கு பல்

வேறு சந்தர்ப்பங்களில் பரிசாக வந்தவை. சில நானே வாங்கியவை.

தொகுப்பு : ஸாரதி
புகைப்படங்கள் : குமார்

'போட்டிக்கு வந்தாகி விட்டது! கலந்து கொண்டு விடுவோம். முடிவைப் பற்றிக் கவலைப்பட வேண்டாம்' என்று தீர்மானித்துக் கொண்டேன்.

எனக்குப் பின்னால் மற்றொரு சிறிய கண்ணாடி பீரோ இருக்கிறது. அதிலே வெள்ளிக் கோப்பைகளும் பதக்கங்களுமாக ஒரு 'குட்டி வெள்ளிக் கடையே இருக்கிறது. நான் கல்லூரி நாட்களில் கலந்து கொண்ட நாடகங்கள், கதம்ப நிகழ்ச்சிகள் போன்ற சந்தர்ப்பங்களில் பரிசாக வந்தவை இவை.

இதோ இந்தக் 'குட்டி வெள்ளிக் கடை'யிலே பெரிதாகக் காட்சியளிக்கிறதே வெள்ளிக்கோப்பை ஒன்று, அதுதான் ஒரு இனிய சம்பவத்தை என் நினைவுக்கு எப்போதும் கொண்டு வந்து கொண்டிருக்கிறது. என் வாழ்நாளில் அந்தக் கோப்பையே நான் பரிசாகப் பெற்ற தினம் மறக்க முடியாத தினம்; அன்று நான் அடைந்த மகிழ்ச்சியை, இன்றுவரை அடையவே யில்லை!

1949-50-ல் பச்சையப்பன் கல்லூரியில் மாணவர்களுக்கிடையே ஒரு ஹாஸ்யப்போட்டி நடந்தது.

ஒவ்வொரு மாணவருக்கும் பத்து அல்லது பதினைந்து நிமிஷங்கள் தரப்படும். அதற்குள் சபையினரைச் சிரிப்பில் ஆழ்த்தி விட வேண்டும். இதுதான் போட்டியில் கலந்து கொள்ளும் மாணவர்களுக்கு விதிக்கப்படும் முக்கிய நிபந்தனையாகும்.

நான் கலந்து கொண்ட வருஷம் கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன் அவர்கள், இந்தப் போட்டிக்கு நீதிபதியாக நியமிக்கப்பட்டிருந்தார்.

கலைவாணரை நான் தெய்வமாகப் போற்றி வருபவன்; எனது அபிமான நடிகர் அவர். அவரைப்போல் ஹாஸ்யப் பாத்திரத்தைத் திறம்பட ஏற்று நடிப்பவர் எவரும் கிடையாது என்ற எண்ண முடையவன். அத்தகையவரது முன்னிலையில் நான் ஹாஸ்யத்தை எப்படி உண்டு பண்ணி, அவரையும் சிரிப்பிலாழ்த்த முடியும் என்று யோசித்தேன்!

போட்டியில் நான் வெற்றி பெற்றேன். ஹாஸ்ய நடிகரையே சிரிப்பிலாழ்த்திய எனக்கு திரு. என். எஸ். கே. பரிசு வழங்கி, ''எதிர்காலத்தில் நீ நல்ல நடிகனாக வருவாய்'' என்று வாழ்த்தினார். என்னால் மறக்க முடியாத சம்பவம் அது; என்னை மகிழ்சி வெள்ளத்தில் ஆழ்த்திய தினம் அது.

சந்திரகாந்தா

என் பெயரை மட்டுமல்ல - என் வாழ்க்கையையே மாற்றி அமைத்த சம்பவம் ஒன்று 1957-ஜனவரிமாதம் 16-ம் தேதியன்று நடந்தது.

அன்றையதினம் சென்னை எஸ். ஐ. ஏ. ஏ. திடலில் பார்க்பேர் பொருட்காட்சியின் சார்பில் சந்திரமோகன் நாடகம் நடை பெற்றது. அதில் நடித்த எனக்கு காந்தா என்றுதான் பெயர் இருந்தது.

இந்த நாடகம் நெடுஞ்செழியன் தலைமையில் நடந்தது. தலைமை வகித்த அவர் பேசும்போது, ''இதே இடத்தில் நேற்று சந்திரோதயம் நாடகத்தில் காந்தா சந்திராவாக திறம்பட - மிகச் சிறப்பாக நடித்ததாகக் கேள்விப்பட்டேன். சந்திரா என்ற பாத்திரத்தோடு ஒன்றிப் போய் நடித்த அவரை இனி 'சந்திர காந்தா' என்றே அழைப்போம். இப்பெயர் அவருக்கு நல்ல புகழையும், எதிர்காலத்தையும் தரும்'' என்று சொல்லி, ஒரு பெரிய வெள்ளிக் கோப்பையும் தி. மு. கழகச் சார்பில் கொடுத்தார். அவர் அப்படிப் பெயரை மாற்றி அமைத்த தாலோ என்னவோ, எனக்கு சந்திர காந்தா என்ற பெயரே நிலைத்தது.

இந்த தினத்தை நான் மறக்க முடியுமா?

★

அஞ்சலி பிக்சர்ஸ்
அடுத்த வீட்டுப் பெண்
காட்சிகள்

தமிழ் நாட்டின் ஹாஸ்ய நடிகர்களில் பெரும் பாலோரைக் கொண்டு அஞ்சலி பிக்சர்ஸார் தயாரித்திருக்கும் ''அடுத்த வீட்டுப் பெண்'' ஹாஸ்யப் படத்தில் அஞ்சலிதேவி கதாநாயகியாக நடித்திருக்கிறார். தயாரிப்பு சங்கீத டைரக்ஷன் பொறுப்புக்களை ஆதிநாராயண ராவ் ஏற்றிருக்கிறார். வேதாந்தம் ராகவய்யா இதன் டைரக்டர்.

பாரகன் பிக்சர்ஸ்

நீதிக்கொரு பெண்

காட்சிகள்





ஜி. ராமகிருஷ்ணன் கதை-டைரக்ஷன் பொறுப்புக்களை ஏற்றிருக்கும் பாரகன் பிக்சர்ஸ் "நீதிக்கொரு பெண்" படத்தை எ.எம்.எம். இஸ்மாயில் தயாரித்து வருகிறார். விஜயா-வாஹினி ஸ்டுடியோவில் வளரும் இதன் வசனங்களை கலைப்பித்தன் எழுத ஜி. ராமனாதன் இசையமைக்கிறார். புதுமை நிறைந்த கதையமைப்பு கொண்ட இப்படம் விரைவில் திரையிடப்படும்.

நீங்கள் காட்டும் அன்புடன், க்யுடிக்யுராவையும் உபயோகியுங்கள்

உங்கள் குழந்தையின் நளினமான சருமத்தை க்யுடிக்யுரா டால்கம் பவுடர் தூவி பேணுங்கள். அது குளுமையும் சுகமும் தருகிறது. குழந்தை ஒவ்வொரு தடவை தூங்கி எழும் பொழுது, இதை தாராளமாக உபயோகித்து துண்டின் வரிகள் தோற்றம், அயர்வு, வேர்குரு இவற்றிலிருந்து காப்பாற்றுங்கள். இதமும் புத்துணர்வும், குளுமையும் தரும் க்யுடிக்யுரா டால்கம் பவுடர் அதிக மிருதுவாகவும், மிக நேர்த்தியாகவும், நன்றாக உறிஞ்சும் தன்மையுடையதாகவும் இருக்கிறது. ஒருபொழுதும் குழந்தையின் மென்மையான சருமத்தில் அருவருக்கும் சிறு கட்டிகளாகச் சேருவதில்லை. போரேட் இன்னும் சிறிது மருந்தும் கலந்து, நேர்த்தியான மணமூட்டியுள்ள இது, வியர்வையின் துர்நாற்றத்திலிருந்து காக்கிறது. இன்றே நீங்கள் உங்களுடைய ஸ்டோரிலிருந்து ஒரு டின் க்யுடிக்யுரா டால்கம் பவுடர் வாங்குங்கள்.

ஒரு டின் பவுடர்
ரூ. 1.75 ந. பை.

க்யுடிக்யுரா

எல்லாக் குடும்பத்திற்கும் ஏற்ற
ஒரு சர்வகாரிய டால்கம் பவுடர்

இனும் ! இனும் !! இனும் !!!



எமது நெ. 501 கருங்கூந்தல் தைலத்தை (ரிஜிஸ்டர்டு) உபயோகிப்பதன் மூலம் எல்லா விதமான ரோமமும் மைக்கறுப்பாக மாறி, பின்னர் எப்பொழுமே கறுப்பாக வளரும். இது முடிகள் உதிர்ந்து போவதைத் தடுத்து, மிகவும் நீண்டதாகவும், பிரகாசமாகவும், சுருண்டதாகவும் வளரச் செய்கிறது.

புட்டி ஒன்றின் விலை ரூ. 1.94.

3 புட்டிகள் (பூராமுறை] ரூ. 5.00.

இந்த அதிசயத் தைலத்தை எங்கும் பரப்ப, ஒவ்வொரு புட்டியுடனும் அழகிய பான்ஸி மியூட் (பொம்மை) வாட்சும், மோதிரமும் (நியூ கோல்டு) அளிக்க நாங்கள் முடிவு செய்திருக்கிறோம். வாட்சின் அழகும் உறுதியும் 15 வருஷங்களுக்கு உத்திரவாதம். 3 புட்டிகள் வாங்குவோருக்கு 6 பான்ஸி ரிஸ்ட் வாட்சுகளும், 6 நியூகோல்டு மோதிரங்களும் இனும். அங்கீகரிக்காமல் போனால் பணம் வாபஸ்.

ஆங்கிலத்தில் கடிதம் எழுதவும்.

BHARAT PHARMACY (P. P. M.)
Jullundur City.

நீங்கள் விரும்புவதை அடையுங்கள்!



மாய மோதிரம்

இந்த மாயமோதிரத்தை அணிபவர் யாராயினும் சரி, அவர்கள் காதலில் நிச்சயம் வெற்றி பெறுவார்கள். எவ்வளவு கடின இதயம் படைத்தவரானாலும், அல்லது தொலை தூரத்தில் இருந்தாலும், அவனோ அல்லது அவளோ உங்களிடம் உடனே வருவார். உங்களிடம் கொண்டுள்ள வெறுப்பை அகற்றி, அவனோ அல்லது அவளோ உங்களுக்கு பணிந்து நடப்பார்கள். நீங்கள் விரும்பிய சேவைகளைப் பெறலாம். நீங்கள் விரும்பும் ஆணையோ அல்லது பெண்ணையோ மணந்து அஷ்ட ஐசுவரியத்தில் உங்கள் குழந்தைகளுடன் குதூகலமாக வாழ்க்கையை நடத்தலாம். உங்கள் பரீட்சை, வியாஜ்ஜியம், வியாபாரம் எல்லாத் துறைகளிலும் வெற்றி கிட்டும். உங்கள் பக்கம் அதிருஷ்டம் திரும்பி நீங்கள் பாக்கியசாலிகளாவீர்கள். நீங்கள் விரும்பிய தெல்லாம் அடைந்து வாழ்க்கையை சந்தோஷமாகக் கழிக்கலாம்.

ஒரு மோதிரம் விலை ரூ. 1.94. எக்ஸ்ட்ரா ஸ்பெஷல் ரூ. 3.94. இது அபூர்வ சக்தியுடையது. இது மிக்க புனிதமான தினத்தில் தயாரிக்கப்படுகிறது. திருப்தியில்லையேல் பணம் வாபஸ். ஒரு முறை பரீட்சித்துப் பாருங்கள். அது உங்களைத் திருப்திபடுத்தும்.

Principal, **BENGAL MESMERISM HOUSE**
(P. P. M.) JULLUNDUR CITY (Pb.)

நான் ரஸித்த காட்சி

தாய் மகளுக்குக் கட்டிய தாலி

பூசாரியும் அவன் நண்பர்களும் ன்றுகூடி கனகுவின் தகப்பனர் லாகு முதலியாரிடம் சென்று கன குவைபற்றி அபாண்டமாகக் கூறு கின்றனர். அப்போது அங்குவரும் கனகுவை அவன் தகப்பனர் விசா ரிக்கிருர். முதலில் தயங்கிய கனகு பூசாரியை நோக்கி, ''நீ குடுமி வைத்திருக்கையில், வக்கிலுக்குப் படிக்கும் உன் மகன்மட்டும் ஏன் கிராப் வைத்துக் கொண்டிருக்கி ருன்?'' என்று கேட்கிருன். ''பாவி மகன் சொன்னு கேட்க மாட்டேங் கருனே!'' என்று அங்கலாய்க் கிருன் பூசாரி. ''உன் மகனையே உன் வழிக்குக் கொண்டு வர முடியவில்லையே. ஊராரைப் பற்றிக் குறைகூற வந்து விட் டாயே!'' என்று கேட்கிருர் லோகு முதலியார். தன்னிடம் குறை யிருக்க ஊராரைத் திருத்த முற்படு வோருக்குச் சவுக்கடி தரும் இந்த அருமையான காட்சியை நான் வெகுவாக ரசித்தேன்.

வங்கல ராமலிங்கன்,
மேற்கு மாம்பலம்.

பொன்னு விளையும் பூமி

இன்பன் பலகாரம் கொண்டு வந்த தும் அதை அவன் திருடியதாக அவசர முடிவுக்கு வந்த நாகன் அவ னைக் கண்டபடி அடித்து விடுகிருன். பிறகு தவறுணர்ந்ததும் தன் கை களை பக்கத்திலிருக்கும் வண்டியில் அடித்துக் காயப்படுத்திக் கொள்ளு கிருன். நாகன் ஒரு உத்தமமான கிராமத்தவன். தவறு செய்தது யாராளுலும் தண்டிக்கத் தவருத அவன், தானே செய்யும் தவறுக்கும் தானே தண்டித்துக் கொள்ளுகிருன். உத்தம குணத்தவர்களின் மனநிலை யைப் பிரதிபலிக்கும் அருமையான காட்சி இது.

பி. கதிர்வேல்,
திருவனந்தபுரம்.

நல்லான் தெருவில் தூக்கிச் செல் லப்படும் ஒரு பிணத்தின் முன்புறம் சென்று அதைத்தான் தூக்கிச் செல் கிருன். யாரென்று அறியாமல் அவன் செல்லும்போது தன் மகன் இன்பன் நெருப்பு தூக்கிச் செல் வது கண்டு திடுக்கிடுகிருன். ஆனல் பிணத்தை எப்படிப் பார்க்க முடி யும்? அவன் பிணத்தின் பாதங் களைப் பார்க்கிருன். தன் தகப்ப னரின் பாதங்கள் என்பதைக் கண்டு பிடித்ததும் அவன் வேதனையால் துடிதுடித்துப் போகிருன். ஜெமினி கணேசனின் முகபாவமும் பின்னணி இசையும் அந்தக் காட்சியின் வேதனையை நன்கு பிரதிபலிக்கின் றன. சோகமான—அதே சமயம் அருமையான காட்சி.

அ. சா. நாகராஜன்,
செங்கற்பட்டு.

நல்லானும் அவன் இதயராணி முத்தம்மாளும் இன்பமாக வாழு கின்றனர். உழைத்துக் களைத்த கணவனுக்கு கஞ்சி கொடுக்கிருள் முத்தம்மாள். மனங்குளிரக் கஞ்சி குடித்தவாறு, ''தொட்டுக்க'' என் கிருன் அவன். ''மிளகாய்'' என் கிருள் அவள். உடனே அவன், ''அதில்லை. நீ என்னைத் தொட்டுக் கோன்னு...''' என்று கொஞ்சுகிருன். விவசாயக் குடும்பத்தின் இளம் தம் பதிகளின் அன்பைப் பிரதிபலிக்கும் எளிமை மிக்க அருமையான காட்சி இது.

துரை. முருகேசன்,
காரமடை.

வஞ்சக நெஞ்சம் கொண்ட பல கோடி-நாகன், நல்லான் இருவரிட



''என்னை விடப்பா. காதலிக்க முடியாத ஜென்மம் என்ன ஜென்மமப்பா!'' என்று வேதனைப்படும் இளைஞரை (சந்திரபாபு) மற்றொரு இளைஞர் (கள்ளபார்ட் நடராஜன்) தேற்றுகிறார்...

மும் முத்தம்மாள் திருமணத்திற்காகச் செலவான தொகைக்கு ஈடாக நிலத்தை அடமானம் போடச் சொல்லுகிறான். அந்தப் பத்திரத்தில் கையெழுத்திட மறுக்கிறான் நல்லான். நாகன் நேர்மை தவறாதவன். உழைத்துப் பிழைத்துக் கொள்ளலாம் என்ற நோக்கத்துடன் தானும் கையெழுத்திடத் தீர்மானித்து மகனையும் போடச் சொல்கிறான். கிராமத்து நல்லவனின் மனோபாவத்தையும், உழைப்பின் பெருமையையு விளக்கும் சிறந் காட்சி இது.

ந. கிருட்டிணமூர்த்தி,
கல்கத்தா.

நல்லான் உள்ளதை எடுத்துச் சொல்ல, அதனால் 'கர்வம் பிடித்தவன்' என்று இகழப்படுகிறான். தன் மகன் நல்லான், பணக்காரரான பலகோடியின் விரோதத்தைச் சம்பாதித்துக் கொள்வதை விரும்பாத நாகன், மகனையும் அடக்கி, அவனுக்காக பலகோடியிடம் மன்னிப்பும் கேட்கிறான். பிறகு வீட்டிலே அவன் மகனை மீண்டும் கண்டிக்கிறான். அவன் போன பிறகு, தன் மகன் சரியான கேள்வி கேட்டதாகக் கூறி தானே மகிழ்ந்து போகிறான். நிர்ப்பந்தம் காரணமாக உண்மையை ஏற்கத் தயங்கும் பத்தாம் பசலிக் கொள்கைக்காரரானாலும் உண்மையை உணர்ந்து பாராட்டும் பண்புள்ளவரின் மனநிலையைப் பிரதிபலிக்கும் அருமையான காட்சி இது. இதை நன்கு ரசித்தேன்.

...பிறகு அந்த இளைஞர் (பாபு) காதலில் அனுபவமிக்கவர் ஒருவரிடம் (டி. எஸ். பாலையா) சென்று அனுபவம் பெறுகிறார். அதனால்தான் அப்படி மகிழ்ந்திருக்கிறாரோ...

வீராசாமி,
காஞ்சிபுரம்.

சகோதரி

சிங்காரம் திருந்தி நல்லவனாகி விடுகிறான். அவன் தன் குடும்ப நண்பர்களுடன் சேர்ந்திருக்கும் போது, தன் வருங்காலம் பற்றிச் சிந்திக்கிறான். "இனி மீனாட்சியைக் கண் கலங்க வைக்க மாட்டேன். எனக்குப் பிறக்கும் பெண் குழந்தையின்மீது ஆணை. கண் மூடித் திறக்கும் இந்த ஒரு வினாடி நல்லதாகப் போய் விட்டால் எவ்வளவு நன்றாக இருக்கும் தெரியுமா? நாளை ஆளுக்கொரு குழந்தையாக வைத்துக் கொண்டு கொஞ்சுவோம்" என்கிறான். ஒரு கொடியவன் திருந்தி விட்டால் அவன் மன நிலை பளிங்கு போல் ஆகிவிடும் என்பதை விளக்கும் ரசமான காட்சி இது.

நாராயணன்,
கோடம்பாக்கம்.

சந்திரன், பங்கஜம் இருவரும் கல்லூரி மாணவர்கள். இருவரும் காதல் மணம் செய்து கொள்ளுகிறார்கள். பங்கஜம் ஒரு குழந்தைக்குத் தாயாகிறாள். ஆனால் கணவனை மீறி நடப்பதாலும் கவனக்குறைவாலும் அவள் தன் குழந்தையைப் பறி கொடுக்கிறாள். பிறகு தன் அலக்ஷிய புத்தியை நினைத்து வருந்துகிறாள். புத்திரபாசத்தின் சிறப்பையும்பெண் புத்தி பின்புத்தி என்பதையும் விளக்கும் அருமையான காட்சி. இதை படத்தில் சித்தரித்திருக்கும் வகையும் சிறப்பாக அமைந்திருக்கிறது.

கே. கே. ரமணி,
திருச்சி.



...புத்தகம் மூலம் காதலைத் தெரியப்படுத்தப் போய் ஒரு யுவதி (எம். என். ராஜம்)யிடம் அதைக் கொடுக்கிறார். அவளுக்கு அது என்ன என்று அறிய ஆவல்! ஆனால் அவருக்குப் பயம்...

...அவள் (ராஜம்) புத்தகத்தைப் படிக்கும்போதே அவர் (பாபு) ஓடிவிடத் தயாராகிறார்! சிவகாமி பிக்சர்ஸ் "குமார ராஜா" தமிழ்ப் படத்தில் இவர்கள் யாவரும் நடித்து வருகிறார்கள்.

ஆமாம், நீ எப்போது இந்த மாதிரி வேஷம் போட ஆரம்பித்தாய்? இந்த வேஷம் எனக்குப் பிடிக்கவேயில்லை......



சபல புத்தியுள்ள சிங்காரம் தங்கத்தின் மீது நாட்டம் கொள்ளுகிறன். இதைக் கவனித்த பால்காரக் கோனர் அவனுக்குக் கூறும் அறிவுரை மிகவும் சிறப்பானது. "இது ஜிகினு இல்லையப்பா தங்கம், குப்பையிலே கிடக்கும் மாணிக்கமப்பா. ஜிகினுவிடம் நீ வாலாட்டினதைப் பொறுத்துக்கிட்டேன். அனல் இது விஷயம் அப்படியில்லை. குடும்பம் ஒரு கோயில். அதன்மேல் கை வைக்காதே. வைத்தால் நான் பொல்லாதவனுக இருப்பேன்'' என்கிருன் கோனர். இந்த அருமையான காட்சியை யார் தான் ரசிக்காமலிருக்க முடியும்? இதில் சந்திரபாபுவின் நடிப்பு பிரமாதம்.

ஆர். பி. ஈஸ்வரன்,
பெங்களூர்.

சபாஷ் ராமு

மோகன் சிந்திக்கிருன். தனக்காக ஒடாக உழைத்த அண்ணன் ராமு குண்டடிபட்டுப் படுத்த படுக்கையாக இருக்கிருன். வீட்டிலிருந்த பணமோ திருடு போய் விடுகிறது. இந்நிலையில் கல்லூரிக்குப் பணம் கட்டவேண்டிய நாளும் நெருங்குகிறது. வேறு வழியின்றி கல்லூரி மாணவனை மோகன் இரவும் பகலும் ரிக்ஷா இழுக்கிருன். அதனல் மட்டும் நிறைய பணம் சேருமா? ஆகவே தன் கல்லூரி பாட புத்தகங்களை விற்கிருன். இதைக் கவனித்த அவன் காதலி ராணி, அந்தப் புத்தகங்களைக் கடைக்காரனிடமிருந்து தானே விலைக்கு வாங்கி தன் காதலனின் ரிக்ஷாவிலேயே அமர்ந்து, தன் வீடு செல்லுமாறு கூறுகிருள். வீடு சென்றதும் காதல் பரிசாகவும், ரிக்ஷா கூலியாகவும் அவனிடமே அப்புத்தகங்களை அளிக்கிருள். உண்மையான காதலியின் மன நிலை

இவர்கள் (பிரேம்நசீர்—எம். என். ராஜம்) ஊரறிய மணந்தவர்கள் போலும்! இல்லாவிடில் இவ்வளவு தைரியமாக மகிழ்ச்சியோடிருப்பார்களா?...

.....சந்தர்ப்பம் என்னை இப்படி ஆக்கி விட்டது. மேகலாவின் "குறவஞ்சி" யில் சிவாஜி கணேசன் - சாவித்திரி.

யைப் பிரதிபலிக்கும் அருமையான காட்சி இது.

நாஸினி பேகம்,
சூரமங்கலம்.

நாகராஜன் தன் மகளைக் கொண்டே மருமகனைக் கொன்று விடுகிறான். நாககன்னிகா தன் கணவனைக் காப்பாற்றுமாறு தந்தையிடம் வேண்டுகிறாள். ஆனால் அவர் மறுக்கிறான். உடனே அவள் பாம்பாக மாறி விஷத்தை உறிஞ்சி மாண்டு போகிறாள். அவன் தந்தை திடுக்கிடுகிறான். ஆத்திரம் அறிவுக்குச் சத்துரு என்பதறியாத அவன் தன் மகள் இறந்த பின் அறிவு மீளப்பெறுகிறான். மனமார நேசித்தவனுக்காக ஒரு பெண் சர்வ பரித்தியாகம் செய்யத் துணிவாள் என்பதை விளக்கும் சிறந்த காட்சி இது. காதலிக்கும் கணவனிடம் உத்தமமான பெண் கொள்ளக்கூடிய அன்பைப் பிரதிபலிக்கும் இக்காட்சியில் தாம்பரம் லலிதா மிகவும் நன்றாக நடித்தார். இதை நான் நன்கு ரசித்தேன்.

நாஸினி முகமதலி,
சேலம்.

அமுதவல்லி

வடநாட்டுப் புலவர் தென்னகத்தில் - அதுவும்தமிழகத்தில் வந்து தன் திறமை காரணமாக மமதைகொண்டு சவால் விடுகிறார். ஒரு இளைஞன் அவர் சவாலை ஏற்று அவரை போட்டியில் வென்று விடுகிறான். அவர் அடிமையாகவருகிறார் யாருக்கும்யாரும் அடிமையல்ல. இது தமிழகத்தின் பண்பு என்பதை விளக்கி அவரை அனுப்புகிறான் அந்த இளைஞன். அருமையான காட்சி இது.

சுந்தர வீராசாமி,
தஞ்சாவூர்.



..... இவர்கள்? (பிரேம் - விஜயகுமாரி) பிரண்ட் பிக்சர்ஸாரின் தயாரிப்பான "தங்கம் மனசு தங்கம்" தமிழ்ப் படத்தில் இந்த ஜோடிகளைக் காணலாம்.

தமிழ்ப் படவுலகின் மீது படை யெடுத்து வந்தவை பல. அவற்றுள் சமீபத்தில் வந்திருப்பது 'ராக் - என் - ரோல்' நடனம். மேலைநாட்டு இளைஞர்களை பைத்தியமாக அடித்துவரும் இந்நடனமும் சங்கீதமும் தமிழ்ப் பட ரசிகர்களையும் கொஞ்சம் கொஞ்சமாக வசப்படுத்தி வருகிறது. 'ராக்-என்-ரோல்' நடனத்தை திரையில் காணும்போது நம் ரசிகர்களும் கைகளைக் கொட்டித், தாளம் போட்டு ரசிக்க ஆரம்பித்து விடுகிறார்கள். இதை யெல்லாம் நன்றாகப் புரிந்து கொண்டிருக்கும் விஜய் ஆர்ட் ஸ்தாபனத்தார், தாங்கள் தயாரித்து வரும் 'பிறந்த நாள்' படத்திலும் 'ராக்-என்-ரோல்' நடனத்தைப் புகுத்தி யிருக்கிறார்கள். படத்தில் முக்கியமான கதாபாத்திர மொன்றை ஏற்று நடித்து வரும் கவர்ச்சி மிகு நடிகை சூர்யகலா, தனது உடலை வில்லாக வளைத்து, பந்தாகச் சுருட்டி, 'ராக் - என் - ரோல்' நடனத்தை இதில் ஆடிக் காட்டியிருக்கிறார். அவர் ஆடியுள்ள இந்த நடனம் படத்தின் கவர்ச்சி மிகுந்த அம்சங்களில் ஒன்றாக விளங்கப் போகிறது. இந்த நடனத்திலிருந்து அவரது சில தோற்றங்களை எடுத்து இங்கே தந்திருக்கிறோம். இந்த நடனத்தையும், இந்த நடனத்திற்கு ஏற்ப அமைக்கப்பட்ட இசையையும் ரசிகர்கள் கண்டு கேட்கும்போது, உண்மையிலேயே தங்களையும் மறந்து கைக் கொட்ட ஆரம்பித்து விடுவார்கள்!



விஜய் ஆர்ட்ஸ்
பிறந்த நாள்

ஹிந்திப் படங்கள்

அசோக்குமாரின் சொந்தப் படமான 'கல்பனா'வின் சில காட்சிகள் இயற்கை அழகு நிரம்பிய காஷ்மீரில் படமாக்கப்பட்டன. படத்தில் கதாநாயகியான பத்மினி நீராடும் காட்சி யொன்றும் அங்கு படமாக்கப்பட்டது.

சுனில்தத் வருகிறார்

சிட்டடெல் 'பாயல்' படத்தில் நடித்த சுனில்தத், மீண்டும் சென்னைக்கு வந்து ஒரு ஹிந்திப் படத்தில் நடிக்கப் போகிறார். ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸ் தயாரிக்கப் போகும் புதிய ஹிந்திப் படத்தில் இவர் நடிக்கப்போகிறார். நடிகை நர்கீஸின் கணவர் சுனில்தத் என்பதும் குறிப்பிடத்தக்கது.

ஹிந்தி 'கல்யாண பரிசு'

வீனஸ் பிக்சர்ஸ் ஸ்தாபனத்தார் தங்களது வெள்ளிவிழாப் படமான 'கல்யாண பரி'சை ஹிந்தியில் தயாரிக்க ஆரம்பித்திருக்கிறார்கள். அவர்கள் தயாரித்து வெளியிடப் போகும் முதல் ஹிந்திப் படமான இதில் ராஜ்கபூர் பிரதம பாகத்தில் சரோஜாதேவியுடன் நடிக்கிறார். ஹாஸ்ய ஜோடியாக ஆகாவும் சபிதா சட்டர்ஜியும் தோன்றுகிறார்கள். ஜெமினி கணேசன் - தமிழ்ப் படத்தில் ஏ. நாகேஸ்வரராவ் ஏற்று நடித்துள்ள பாத்திரத்தில் நடித்து வருகிறார்.

ஸ்ரீதர் டைரக்ட் செய்யும் இந்தப் படத்தின் வசனத்தை ராஜேந்தர் கிஷன் எழுதியுள்ளார். விஜயா - வாஹினியில் படப்பிடிப்பு நடைபெறுகிறது.

பர்க்கா

சென்ற மாதம் முதல் தேதியன்று ஏவி. எம். வெளியிட்டிருக்கும் 'பர்கா' ஹிந்திப்படம், மிகச் சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கிறது. 'தை பிறந்தால் வழி பிறக்கும்' படத்தின் ஹிந்திப் பதிப்பான இதில் ஜக்தீப், நந்தா, ஷோபா கோட்டே முதலியோர் நடித்திருக்கிறார்கள்.

கிருஷ்ணன் - பஞ்சு டைரக்‌ஷனில் தயாரான படம் இது.

இந்த இரட்டையர்களின் டைரக்‌ஷனிலேயே, மற்றொரு புதிய ஹிந்திப் படத்தை ஏவி. எம். உருவாக்க

திட்ட மிட்டிருக்கிருர். 'திருட்டு ராமன்' படத்தையும் ஹிந்தியில் வெளியிடும் யோசனை இருந்து வருகிறது.

ஹிந்தியில் ராமாயணம்

எம். ஏ. வி. பிக்சர்ஸ் தயாரித்து வெளியிட்டுள்ள 'சம்பூர்ண ராமாயண'த்தை ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸார் ஹிந்தியில் 'டப்' செய்து வருகிருர்கள். இப்படம் இம்மாதம் வெளியிடப்படும்.

இது தவிர ஜிம்போ முதலிய படங்களைத் தயாரித்து வெளியிட்டுள்ள ஹோமி வாடியா ராமாயணத்தை கேவாகலரில் தயாரித்து வருகிருர். இது தவிர, டைரக்டர் பிமல்ராயும், கே. ஆசிப்பும் ராமாயணத்தைத் தயாரிக்கத் திட்டமிட்டிருக்கிருர்கள் என்பதும் குறிப்பிடத் தக்கது.

சோட்டி-பெஹன்

தென்னிந்தியாவின் பிரபல டைரக்டர் பிரசாத் தயாரித்திருக்கும் 'சோட்டி-பெஹன்' தமிழ் நாட்டின் முக்கிய நகரங்களில் திரையிடப்பட விருக்கிறது. சென்னையில் தற்போது வெற்றிகரமாக ஓடிக் கொண்டிருக்கும் இப்படம், 'என் தங்கை' தமிழ்ப் படத்தின் ஹிந்திப் பதிப்பாகும்.

பால்ராஜ் சஹானி, நந்தா, ஷ்யாமா, ஷுபாகோடே முதலியோர் நடித்திருக்கும் இப்படத்தின சங்கீத டைரக்ஷனை சங்கர்-ஜெய்கிஷன் செய்திருக்கிருர்கள்.

தாலாட்டுப் பாட்டு இங்கு இருக்குமா? பி. ஆர். பிலிம்ஸ் 'தோல்-கா-பூல்' படத்தில் 'கவர்ச்சி நடிகை' மாலா சின்ஹா.

அகர முதல எழுத்தெல்லாம் ஆதி பகவன் முதற்றே உலகு

-குறள்

கடவுள் இருக்கிறார். அவரை நம்பினவர் கெட்டதில்லை. இதற்கு நிரூபணமாகப் பல நிகழ்ச்சிகள் பலருடைய வாழ்க்கையில் நடக்கின்றன. தன்னால் எதுவும் செய்ய முடியும் என்று நினைத்து இறுமாந்து விடுபவர்கள் கடைசியில் ''அகர முதல எழுத்தெல்லாம் ஆதிபகவன் முதற்றே உலகு'' என்பதை உணரவே செய்கிறார்கள்.

சிலர் பொதுவாக கடவுளே இல்லை என்று சொல்லி விடுகிறார்கள்.

ஆனால் அவர்களுக்கு ஏதாவது ஆபத்து நேர்ந்து விட்டால் அவர்கள் மனம் அவர்களது வீராப்பையும் மீறி, ''தெய்வமே! இந்த ஆபத்திலிருந்து காப்பாற்று'' என்று வேண்டிக்கொள்ளும். ''நான் இந்த ஆபத்திலிருந்து தப்பிவிட்டால் அதைச் செய்கிறேன். இதைச் செய்கிறேன்'' என்று கடவுளுக்கு லஞ்சம் கொடுக்கத் தயாராகி விடுபவர்களும் உண்டு.

'அவனன்றி ஓர் அணுவும் அசையாது' என்பதில் அசைக்க முடியாத நம்பிக்கை கொண்டவன் நான். நான் நம்பிய கடவுள் என்னைக் காப்பாற்றிய ஒரு சிறு நிகழ்ச்சியை இங்கே குறிப்பிடுகிறேன்.

அப்போது, அதாவது 1939-40-ம் வருஷம், நான் நவாப் ராஜமாணிக்கம் அவர்களின் கம்பெனியில் கதாநாயகனாக நடித்து வந்தேன். சென்னை ராயல் தியேட்டரில் அப்போது எங்கள் கம்பெனி நாடகங்களை நடத்தி வந்தது. எனக்கு சுமார் பதின்மூன்று வயதிருக்கும்.

அன்று ''பிரேமகுமாரி'' நாடகம் நடைபெற்றது. நான் பிரதாப சிம்மனாகவும் மீனாக்ஷி சுந்தரம் என்பவன் பிரேம குமாரியாகவும் நடித்தோம். சந்திரன் என்பவன் லீலாவாகவும் காலஞ்சென்ற ரத்தினவேலு ஹமீத்கானாகவும், கே. வி. சீனிவாசன் ஆனந்தனாகவும் எம். என். நம்பியார் நவாபாகவும் நடித்தார்கள். நாடகத்திற்கு அப்போது நல்ல வரவேற்பு இருந்தது.

பிரேமகுமாரி ஒரு நாட்டின் இளவரசி. அவளைக் காதலிக்கும் வேற்று நாட்டு இளவரசனை பிரதாபசிம்மன், அவளை அவளது அந்தப்புரத்தில் வந்து சந்தித்து அளவளாவிக் கொண்டிருக்கிறான். அப்போது திடீரென ஹமீத்கானின் தலைமையில் மொகலாய சேனை பிரேம குமாரியின் கோட்டையைச் சூழ்ந்து கொள்ளுகிறது. இந்த விஷயத்தை பிரதாபசிம்மனின் நண்பன் ஓடிவந்து சொல்கிறான். 'அப்படியா?' என்று கேட்டு பிரதாப சிம்மன் வாளை உருவும்போது, ஹமீத்கான், படைவீரர்களுடன் அங்கே வந்து விடுகிறான். அங்கே அத்தனை பேருடனும் வாட்போரிடுகிறான் பிரதாபசிம்மன்.

அப்போதெல்லாம் மேடையிலே சண்டைக் காட்சிகள் தத்ரூபமாக இருக்கும். சரியாக சண்டை போட்டு விட்டு மக்களிடையே கரகோஷம் பெறுவிடில், உள்ளே சென்றதும் வாத்தியாரிடம் சரியான உதை கிடக்கும்.

நாடகத்தின் இந்த சண்டைக் காட்சியில் நான் வாளை வீசிக் கொண்டிருக்கும்போது, ஆனந்தனாக நடித்த கே. வி. சீனிவாசன் அவரது வாளுடன் வந்து என் எதிரே நிற்கும் அன்னியரிடம் வாளை வீசுவதுபோல் நடித்தார். அவர் ஹாஸ்ய நடிகர். அவர் எதிரியின் மேல் வீசிய வாள், என் கை விரலில் மோதியது. விரல் பாதி துண்டாகக் கையில் தொங்கியது. ரத்தம் கொட்டியது. இதைக் கண்ட நான் ''முருகா!'' என்று கூவியபடிக் கீழே விழுந்தேன்.

உடனே திரை தொங்கவிடப் பட்டது. நவாப் அவர்கள் ஓடிவந்து, ''தேவி......இப்படிச் செய்து விட்டாயே!'' என்று கூவினார். நாடகம் பார்க்க வந்திருந்தோர் என்னைக் காணத் துடித்தனர். பிரபல டாக்டர் திருச்சி பாலு நாடகம் பார்க்க வந்திருந்தார். அவர் உடனடியாக ஓடி வந்து எனக்குக் கட்டுப் போட்டார். பிறகு நாடகத்தில் நான் தொடர்ந்து நடித்தேன்.

அதன் பிறகு நான் சுமார் இரண்டு மாதங்கள் சிகிச்சை பெற்று வந்தேன். இனி கூடாது என்று தீர்மானம் செய்த விரல் கூடிவிட்டது. பழையபடி ஆகியும் விட்டது.

இந்த இரண்டு மாத காலத்தில் நான் நாடகங்களில் நடித்து வந்தேன். அதே விரல் கட்டுடன் நடித்து வந்தேன். ரணம் ஆறி வருவது தெரிந்ததுடன் நாடகங்களின்போது வலியே தெரியாமலிருந்தது. இது எனக்கு ஆச்சரியத்தையே கொடுத்தது. வெட்டுப்பட்ட விரல் கட்டுப் போட்டபடி இருந்தும் வலி தெரியவில்லை என்றால், கடவுளின் அருள் தவிர வேறு எதை காரணமாகச் சொல்ல முடியும்?

கடவுள்தான் என்னைக் காப்பாற்றினார். சீனிவாசன் வீசிய வாள் கொஞ்சம் தவறி வேறு எங்காவது பட்டுவிட்டிருந்தால்...? நினைக்கும் போதே நெஞ்சம் பதறுகிறது.

கடவுளின் அருள் இல்லாமல் எதுவுமே நடக்காது என்பதை என்னைப்போல் பலர் அனுபவத்தில் கண்டிருப்பார்கள் என்பது நிச்சயம்.

கடவுளின் கருணையை நான் அனுபவத்தில் கண்டேன். இல்லையென்று யாரும் சொல்ல முடியுமா?

டி. பி. ஹரிசிங்.

இந்த அன்புத் தம்பதிகள் கனவுல் காண்பதை எண்ணி வியக்கிறார்கள் - ஆனால் புத்தகத்தை மார்பில் வைத்து உறங்கும் அவன் மனக்கண் காண்பதையும் இந்தத் தம்பதிகள் பார்க்க நேர்ந்தால் என்ன ஆகுமோ? எப்படி முடியுமோ?
கமால் சகோதரர்கள் 'தெய்வப் பிறவி'யில் நடிகர் திலகம், பத்மினி, எஸ். எஸ். ஆர்., எம். என். ராஜம்.

ரூ. 300 இனும்

இந்த மகாகாளி இயந்திரத் தகடை நீங்கள் முழு மனதுடன் உங்கள் கை வசம் வைத்திருந்தால், நீங்கள் நினைத் தவை கைகூடும். உங்கள் விரோதிகள் எவ்விதமான நிலைமையிலிருந்தாலும் உங்க ளுக்குப் பணிவார்கள். நீங்கள் எதைக் குறித்துத் தேடுகிறீர்களோ, அது உங்க ளைத் தேடி வரும். இந்தத் தகட்டை கை வசம் வைத்துக்கொண்டு தியானம் பண் ணும்போது. இந்த மகாகாளி தோன்றி நீங்கள் விரும்புவதை அடையும்படி செய் வாள். ஒரு யந்திரத் தகடு விலை ரூ. 1.25 ந. பைசே. ஒரே தடவையில் 3 ஆர்டர் செய்தால் ரூ. 3-12 நயா பைசே. உடனே பலன் தெரியக்கூடிய யந்திரத்தகடு ஒன்று ரூ. 3.88 நயா பைசே. தபால் செலவு தனி. சக்தி இல்லை யென்று நிரூபிப்பவர் களுக்கு ரூ. 300 இனும்.

THE BENGAL MESMERISM HOUSE (M. P. X.)
JULLUNDUR CITY (Pb)

1960-ல் என்ன நேர இருக்கிறது?

புத்தாண்டாகிய 1960-க்குள் ஏற்படக்கூடிய நன்மை தீமைகளை முன்கூட்டி அறிய விரும்பி னால் ஒரு தபால் கார்டில் ஒரு புஷ்பத்தின் பெயரும், முழு விலாசமும் அனுப்பி வையுங்கள். 12 மாதத்திற் குள் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், வியாபரத்தில் வெற்றி, எந்த விதத்தில் பணம் கிடைக்கும், உத்தி யோகம் எப்பொழுதும் கிடைக்கும், வழக்கில் வெற்றி, உத்தியோக மாற்றம், தேகாரோக்கியம், மனைவி மக்கள் சுகம், தேக அசௌக்கியம், தூரதேசப் பிர யாணங்கள், பரீக்ஷையில் வெற்றி, கலியாணம், அதைப் பற்றிய பேச்சுக்கள், நிலபுலன்களின் மூலம் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்கள், புதிய நட்பு, அத னால் உண்டாகும் பலன், சூதாட்டத்தின் மூலமாக வும், புலப்படாத இதர வழிமளினல் ஏற்படக்கூடிய லாப நஷ்டங்களையும் ஜோதிட முறைப்படி கணித்து அறிவிக்கப்படும். இதற்கு ரூ. 1.25. (வி. பி. மூலம் அனுப்பப்படும்) தபால் செலவு தனி.

இத்துடன் துரதிருஷ்டத்தை அதிருஷ்ட வழியில் செலுத்தும் உபாயங் களும் அனுப்பப்படும். இதனல் ஏற்படக்கூடிய இன்னல்களில் இருந்து இது தன்னைக் காப்பாற்றிக் கொள்ள உதவும். ஒரு முறை பரீக்ஷித்துப் பார்த்தால் எம்முடைய ஜோதிட அனுபவம் விளங்கும். பொய் என்று நிரூபித்தால் பணம் வாபஸ் செய்யப்படும்.

Shri Swami Satnarayan Raj Jyotishi, (P. M.)
JULLUNDUR CITY (Punjab)



T.G.R. பிக்சர்ஸ்

இவன் அவனேதான்

காட்சிகள்





'ராஷ்மி' எழுதிய கதையை டி. ஜி. ஆர். பிக்சர்ஸார் படமாக்கி யிருக்கிருர்கள். இந்தக் கதை அன்ருடக் குடும்ப நிகழ்ச்சிகளைக் கொண்டு பின்னப் பட்டது. காட்சிக்குக் காட்சி, வயிறு வெடிக்கச் செய்யும் ஹாஸ்யம் இப்படத்தில் குறிப்பிடத்தக்க அம்ச



மாகும். விஜயா - வாஹினி ஸ்டுடியோக்களில் தயாரான இந்தப் படத்தை டி. ஜி. ராஜ் உருவாக்கி யிருக்கிருர். ஸ்ரீதர் ராவ் படத்தை டைரக்ட் செய்திருக்கிருர். சுவையான குடும்பச் சித்திரமாக விளங்குகிறது இந்தப் படம்.



திருவாங்கூர் சகோதரிகளுடன் நடனமாடி வரும் நாட்டிய நடிகை அம்பிகா முதன் முதலாக இந் தமிழ்ப்படத்தில் கதாநாயகியாக நடிக்கிறார் மற்றும் உதயகுமார், சஹஸ்ரநாமம், தேவிகா, பண்டரிபாய் நடித்துள்ள இப்படம் நல்லதொரு பொழுதுபோக்குச் சித்திரமாக அமைந்துள்ளது.

5 மணங்கிலிருந்து 50 மணங்கிற்கு....

.... இப்படி ஏக்கர் விளைச்சலில் அதிகரிப்பை ஷேக் அப்துல் காபரும் அவரது ஐந்து சகோதரர்களும் சாதித்துள்ளனர். அவர்கள் வெற்றியின் ரகசியம்: சிறந்த சாகுபடி முறையும் கூட்டு விவசாயமும் தான்.

பீஹாரின் வாட்கன்ஞ் கிராமத்தில் உள்ள இந்த விவசாயிகள். முதன் முதலாகச் செய்யும் உணர்ச்சியுடன், நவீன சாகுபடி. சால் விதைப்பு முறைகளை பின்பற்றியதுடன், சிறந்த விதைகள், போதிய உரங்களையும் உபயோகித்து வந்தனர். இத்துடன் புதிய கருவிகளையும் விவசாய முறைகளையும் கையாண்டு கூட்டாக சுமார் 45 ஏக்கர் நிலத்தில் பயிரிட்டனர். இவை யாவற்றையும் தங்கள் சொந்த முயற்சியினாலேயே செய்தனர்.

பலன்: சம்பிரதாயமான முறையினால் முன்பு சராசரியில் ஒரு ஏக்கருக்கு 5 மணங்கு கோதுமை அல்லது நெல்தான் கிடைத்து வந்தது. ஆனால், இப்பொழுதோ, சிறந்த சாகுபடி முறைகள் அவர்களுக்கு ஏக்கருக்கு 40 முதல் 50 மணங்கு வரை தந்துள்ளன.

உங்கள் நிலமும் அதிக உற்பத்தியை அளிக்க முடியும். சிறந்த விவசாய முறைகளைக் கையாண்டு அதிக மகசூலை அடையுங்கள். இதனால் யாவருக்கும் அதிக உணவும் கிடைக்கும்.

திட்டத்துக்கு உதவுங்கள்
முன்னேற்றம் அடையுங்கள்

? கேள்வி - பதில்

இ. மா. காந்தி, இருமத்தூர்

டிமிலியின் 'பத்துக் கட்டளை'கள் படத்தில் உங்களுக்கு எந்தக் கட்டம் மிகவும் பிடித்திருந்தது?

பாறையில் பத்துக் கட்டளைகள் பொறிக்கப்படும் காட்சி.

'டப்பாங் குத்து' நடனம் ஆடுபவர் தான் நடிகரா?

1959-ன் படவுலகில் புது இலக்கணமாக இருந்தது இது, ஒரு நடிகரை எடை போட!

கலை உலகில் புல்லுருவிகளாகத் திகழ்பவர் யார்?

'ஆமாம்' சாமிகள்!

'அதிசயம்' என்ற வார்த்தைக்கு திரையுலகில் அர்த்தம் என்ன?

குறித்த காலத்தில் ஒரு படத்தை முடிப்பது!

துரை. முருகேசன், காரமடை

கவலையைக் கனவாக்குவது எது?

முயற்சியின் பலன்.

எண்ணத்தின் எதிரொலி எது?

செய்யும் செயல்.

பி. எஸ். ராமசாமி, பனங்காட்டூர்

பட்டுக்கோட்டையாருக்குப் பிறகு படவுலகில் சிறந்த பாடலாசிரியர் யார்?

கல்யாணசுந்தரத்தைப் போல தனது பிறந்த ஊருக்குப் பெருமை தேடித் தந்த கவிஞர் தான்!

ஸ்ரீதர் எனக்குக் கடிதமும் புகைப் படமும் அனுப்பினர். இதிலிருந்து என்ன தெரிகிறது?

அவருக்கு ஓய்வு இருக்கிறது என்று.

டி. கெங்கை முத்து, அருப்புக்கோட்டை

அவள் யார், பாகப் பிரிவினை இரண்டு படங்களில் 'நடிகர் திலக'த்தின் நடிப்பு எதில் சிறந்து விளங்கியது?

'அவள் யா'ரில்.

'புரட்சி நடிக'ரிடம் தாங்கள் காணும் இரண்டு உயர்ந்த குணங்களைச் சொல்ல முடியுமா?

எந்த இரண்டைக் குறிப்பிடுவது என்றுதான் தெரியாமல் தவிக்கிறேன்!

குழந்தை, வாலிபன், வயோதிகன் இவர்கள் ஒரு படத்தைக் காணும்போது என்ன நினைப்பார்கள்?

குழந்தை அதை 'அதிசயம்' என நினைக்கும்; வாலிபன் தன் எண்ணத்தைப் பிரதிபலிக்கும் 'கண்ணாடி' என நினைப்பான்; வயோதிகனுக்கு கடந்த காலத்தை நினைப்பூட்டும் 'தேய்ந்த கனவாக'த் தோன்றும்!

ஜாதகம் என்பது என்ன?

கிரகங்களைக் கொண்டு விளையாடப்படும் சொக்கட்டான்!

விதியால் யாருக்கு லாபம்?

சோம்பித் திரிபவர்களுக்கு.

ஏ. காதர் பாட்சா, வத்தலகுண்டு

கதை, வசனம் எழுதுபவரே டைரக்ட் செய்வதற்கும், கதை - வசனம் ஒருவர் எழுத, மற்றொருவர் டைரக்ட் செய்வதற்கும் உள்ள வித்தியாசம் என்ன?

முன்னவர் செய்வதனல் பொறுப்பு அதிகரிக்கும்; செலவும் குறையும்.

ஆர். மாரிஸ், பாண்டிச்சேரி

'பொன்னு விளையும் பூமி'யில் பகதூர் என்ற பாத்திரத்தில் நடிப்பவர் யார்?

படத்தின் தயாரிப்பாளரான சத்திய பால் அவர். பத்மினியின் ஒன்று விட்ட சகோதரர் அவர்.

நடிகவேள் எம். ஆர். ராதா திராவிடக் கழகத்தைச் சேர்ந்தவரா?

அக் கழகக் கூட்டங்களில் கலந்து கொள்கிறார்.

சந்திரபாபு எத்தனை படங்களில் கதா நாயகனாக நடிக்கிறார் ?

கவலையில்லாத மனிதன், குமார ராஜா இரண்டு படங்களில் நடித்து வருகிறார்.

வி. ஜி. சங்கர், கோவை

சென்ற ஆண்டு (1958) அதிக நாட்கள் ஓடிய படம் சபாஷ் மீனா, நாடோடி மன்னனா ?

'சபாஷ் மீனா'தான்.

'கட்டபொம்மன்' பத்மினி பிக்சர்ஸாருக்கு வெற்றிப்படமா, தோல்விப் படமா?

மகத்தான வெற்றிப் படம்.

ஜி. கே. சங்கிங்கல், கொல்லங்கோடு

இவ்வருஷத்தின் சிறந்த படமென்று 'கல்யாண பரி'சைத் தேர்ந்தெடுப்பார்களா?

யார்?

பி. எஸ். மணியம், மலாயா

அழகிய வாலிபன் அவலட்சணமான பெண்ணைக் காதலிப்பதுண்டா ?

'காதலுக்குக் கண் இல்லை' என்று சொல்கிறார்களே!

இன்னும் பத்து வருஷங்களில் தமிழ்ப் படங்களின் தரம் எப்படி இருக்கும்?

நம் படங்களைப் பார்த்து பிறர் காப்பியடிக்கும் வகையில் இருக்கும்.

பாட்டாளியின் உரிமைக்குரலெழுப்பும் தலைவன் இவன். இடையே உள்ள இரும்புத்திரை விலக்கப்பட்டு முதலாளியும் தொழிலாளியும் பரஸ்பரம் நல்லெண்ணம் கொள்ளவேண்டும் என்கிறான். பொங்கலன்று திரையிடப்பட்ட ஜெமினியின் "இரும்புத் திரை"யில் சிவாஜி கணேசன்.

காதலில் ஏற்படும் தோல்வியின் முடிவு?

உள்ளத்தில் ஆறாத வடு.

ரஷ்யாவில் இரும்புத்திரை இருப்பது போல, சினிமா ஸ்டுடியோக்களிலும் இருப்பது உண்மையா?

ஜெமினியில் இருக்கிறது. இங்கு நடக்கும் விஷயங்கள் எதுவும் வெளியே தெரிவதே இல்லை. படப்பிடிப்பைப் பார்க்கவும் எவரையும் அனுமதிப்பதில்லை.

கனக. சுப்பிரமணியம், சென்னை

இந்திப் படங்களை நீங்கள் பார்க்கிறீர்களா?

பார்ப்பதுண்டு—நல்ல படங்கள் எனத் தெரிந்தால்.

கேள்வி கேட்பது கடினமா? பதில் சொல்வது கடினமா?

கல்யாண மானவர்களிடம் கேட்டுப் பாருங்கள். எத்தனை பேர்கள் மனைவி கேட்கும் கேள்விகளுக்குப் பதில் சொல்லத் தெரியாமல் திணறுகிறார்கள்!

நீங்கள் கட்சிச் சார்பற்று இருக்கிறீர்களே, அது உங்களால் எப்படி முடிகிறது?

மனச்சாட்சியை நான் கொல்லுவதில்லை!

எஸ். ஸ்டான்லி துரைராஜ், கோவை

சிவாஜி கணேசனை வில்லனாகவும், ஐ. எஸ். ஜோஹரை கதாநாயகனாகவும் போட்டு படம் எடுத்தால்...?

தண்டனையைத் தாங்கமாட்டார் ஜோஹர்!

எச். பத்மனாபன், ஜா-எல. இலங்கை

நடிகர் திலகமும், ஏ. நாகேஸ்வரராவும் சேர்ந்து நடித்த படம் என்ன?

''பூங்கோதை''யில் இருவரும் நடித்தார்கள்.

சா. இரத்தின முகமது, வத்தலகுண்டு

பாகவதர் காலமானதற்கும் பட்டுக்கோட்டையார் காலமானதற்கும் உள்ள ஒற்றுமை என்ன?

கருத்தும் - கானமும் கலந்து பேசிய ரகசியம் இது.

எம். கே. ராதா இப்போது என்ன செய்கிறார்?

இருதய நோயால் தாக்கப்பட்டு, குணமடைந்துள்ள அவர் தற்போதுதான் வெளியே நடமாட ஆரம்பித்திருக்கிறார். படங்களில் இனி நடிப்பாரா என்பதை பொறுத்துத்தான் பார்க்க வேண்டும்.

இப்போது திரையுலகில் காணப்படும் புதுமை என்ன?

அதிருஷ்டத்தில் நம்பிக்கையைக் கூட்டி பெயரைச் சிதைத்து எழுதுவதுதான்!

''அடுத்தபடி யார் குடும்பத்தைக் கெடுத்தால் நம் வாழ்வு உயரும்?'' என்று திட்டம் போடுகிறவனைப் போலில்லையா, இவனைப் பார்த்தால்? —ஆர். ஏ. பிக்சர்ஸ் ''பண்ணையார் மகன்'' படத்தில் 'வில்லன்' டி. கே. ராமச்சந்திரன்.

பின்னல் நிற்கும் வேலைக்காரனுக்கு இங்கு உட்கார்ந்திருப்பவரைப் பிடிக்க வில்லை என்பதை முகபாவமே காட்டு கிறதே! ஏ.எல்.எஸ். புரொடக்ஷன்ஸ் ''சங்கிலித்தேவன்'' படத்தில் எஸ். ஏ. நடராஜனும் வி. ஆர். ராஜகோபாலும்.



திருநாவுக்கரசு, மதுரை

எம். ஜி. ஆருக்கும் சிவாஜிக்கும் கடும் போட்டியாமே?

ஆமாம், தமிழகத்தின் பெருமை யைத் தரணியில் உயர்த்துவதிலும், ஆபத்து என்றவுடன் உதவிக்கு ஓடு வதிலும் இருவரிடையே போட்டி கடுமையாகத்தான் இருக்கிறது!

அசு. அப்துல்ஹை, அரகண்டநல்லூர்

சினிமாவை தேசீய மயமாக்கினல் ஊழல் மலிந்து விடும் என்று சொல் கிருர் என் நண்பர். நீங்கள் என்ன சொல்கிறீர்கள்?

சொல்வதற்கென்ன இருக்கிறது? உமது நண்பரின் கூற்றைத்தான் அரசாங்கம் பல துறைகளில் நிரு பித்து வருகிறதே!

உங்களுக்கு 'போர்' அடிக்கும் நேரம் எது?

படம் பார்க்கும்போது, சாவைத் தொடர்ந்து அதில் ஒரு பாட்டு வரு மானல், அந்த நேரம்!

'மஞ்சள் பத்திரிகை' - விளக்கம் என்ன?

அஸ்திவாரமற்ற அவதூறு!

நாள்தோறும் தேதி கிழிப்பது எதைப் போன்றது?

வாழ்க்கை என்னும் பிரயாணத் தில் மைல் கல்களைக் கடப்பது போன்றது.

எம்.ஜி.ஆர். நடித்து அடுத்து வரப் போகும் படம் எது?

பாக்தாத் திருடன்.

நடிகர் வீட்டு தர்வானின் மனப் பாடம் எது?

'இல்லை' என்பது!

'ரோம்பற்றி எரியும்போது பிடில் வாசித்தான் நீரோ' என்கின்றனர். ரோம் நகரை நீரோ ஆண்ட காலத்தில் பிடில் கண்டு பிடிக்கப்படவேயில்லை என்று சொல்கிருர் ஒரு துணிச்சல் பேர்வழி. நீங்கள் என்ன சொல்கிறீர் கள்?

அமெரிக்கர்கள் சரித்திரப் படங் களைத் தயாரிக்கும்போது நன்கு ஆராய்ந்து, உண்மையை அப் படியே படம்பிடித்துக் காட்டுபவர் கள். 'கோவாதிஸ்' என்ற ஆங்கிலப் படம் நீரோவின் வரலாற்றைச் சேர்ந்தது. அதில் வரும் நீரோ பிடில் வாசிப்பதாகக் காட்டப்பட வில்லை. 'ஹார்ப்' என்ற தந்தி வாத்தியத்தைத்தான் வாசிக்கிருன், விரல்களைக்கொண்டு. இந்த விளக் கம் போதாதா?

ஏ. நாகலக்ஷ்மி, பொள்ளாச்சி

'பாகப் பிரிவினை'யில் தங்களுக்கு மிகவும் பிடித்த கட்டம் எது?

தன்னை மணம் செய்து கொள்ள பொன்னி சம்மதித்தவுடன், அந்தச் செய்தியைக் கேட்ட கன்னையன் தன் உள்ளுணர்ச்சியை முகபாவத் தில் ஒரு நொடியில் காட்டுகிருனே, அந்த ஈடு இணையற்ற கட்டம்!

சரோஜாதேவிக்கும், தேவிகாவுக்கும் என்ன வித்தியாசம்?

'தேவி' இடம் மாறி விட்டாள்!

ராகவன், சிதம்பரம்

டைரக்டர் பிரசாத் எங்கே?

சொந்தத்தில் சென்னையில் ஸ்டுடியோ கட்டுவதில் முனைந்திருக்கிறார். தமிழ்ப் படங்களை மறந்து, ஹிந்திப் படங்களைத் தயாரிப்பதில் மூழ்கி யிருக்கிறார்.

சிவாஜி கணேசன், எம். ஜி. ஆர். இருவரில் யார் உயர்ந்தவர்?

எம். ஜி. ஆர். தான். இருவரையும் சேர்ந்தாற்போல் நிற்க வைத்துப் பார்த்தால் இந்த உண்மை தெரியும்!

புராணப் படங்களுக்கும் சரித்திரப் படங்களுக்கும் வித்தியாசம் என்ன?

புராணத்தில் கடவுள் வந்தால் சரித்திரப் படத்தில் ராஜா வருவார்; புராணப்படத்தில் நாரதர் வந்தால் சரித்திரப் படத்தில் ஒற்றன் வருவான்; தேவலோக மாது புராணப் படத்தில் நடனமாடினால், சரித்திரப் படத்தில் அரண்மனை தேவதாசி ஆடுவாள். புராணப் படத்தில் கடவுள் வெற்றி யடைந்தால் கைதூக்கிக் கும்பிடும் மக்கள் இன்னும் சில ஊர்களில் இருக்கிறார்கள்; இதுவே சரித்திரப்படமானால் கை கொட்டி ஆர்ப்பரிப்பார்கள். போதுமா?

ஜேராட் எலக்ட்ரானிக் இன்டஸ்ட்ரீஸ்
38, தங்கசாலை வீதி. மதராஸ் - 3

சோலைமலை, பூத்தமுல்லை

இளம் நடிகை எல். விஜயலக்ஷ்மிக்கும், 'சபாஷ் மீனா' மாலினிக்கும் உள்ள உறவென்ன?

மாலினி 'சபாஷ் மீனா'வில் நடித்து விளம்பரம் பெற்றார்; விஜயலக்ஷ்மி நடித்த நல்ல படம் எதுவொன்றும் வராமலேயே விளம்பரம் பெற்று வருகிறார்.

'எம். ஜி. ஆர். ஸ்டுடியோ' - திட்டத்திலிருந்து செயலில் எந்த நிலைக்கு வளர்ந்திருக்கிறது?

திட்டம் தற்போது கைவிடப்பட்டிருக்கிறது.

திரை அழகி பத்மினியின் திருமண ஏற்பாடுகள் பற்றி ஒரு சில வரிகள்?

மிகச் சிறப்பாக இருக்கும்.

ந. சி. மூர்த்தி, கல்கத்தா

எம். ஜி. ஆரும் பானுமதியும் இப்போது ஏன் புதுப்படங்களில் ஒப்பந்தமாவதில்லை?

இருவரையும் சமாளிக்கும் தைரியம் பட முதலாளிகளுக்கு இல்லாததால்.

பி. எஸ். மணியன், சென்னை

'ஸ்கூல் மாஸ்டர்' ஹிந்திப்படம் வட இந்தியாவில் எப்படி ஓடுகிறது? அதில் சிவாஜியின் நடிப்பைப்பற்றி வட இந்தியப் பத்திரிகைகள் என்ன கூறுகின்றன?

சிறப்பாக ஓடிக்கொண்டிருக்கும் அந்தப்படத்தில் சில காட்சிகளில் மட்டும் நடித்திருக்கும் கணேசனைப் பற்றி குறிப்பிடும்படி ஒன்றுமே குறிப்பிடவில்லை.

ஆர். கண்ணன், கல்கத்தா

'நல்லதீர்ப்பு' படத்தில் சிவாஜி கணேசனை காப்பியடித்து ஜெமினி நடித்திருக்கிறார் என்பதை தாங்கள் ஒப்புக்கொள்கிறீர்களா?

குறிப்பாக வழக்கு மன்றக் காட்சிகளில் சிவாஜி கணேசனின் சாயல் அவர் நடிப்பில் இருந்ததை ஒப்புக்கொள்ளுகிறேன்.

ஆர். சம்பத்குமாரன், சேலம்

வடநாட்டு திலீப்பும், தென்னாட்டு நடிகர் திலகமும் ஒன்று சேர்ந்து நடித்தால் எப்படி யிருக்கும்?

'வஞ்சிக்கோட்டை வாலிப'னில் வரும் போட்டி நடனத்தைப் போன்றிருக்கும்!

அறியாச் சிறுவர்களையும்-சாணத்தை வீசி எறியும்படி ஆத்திர முறச் செய்வது எது?

உங்கள் கேள்வியின் ஆரம்பத்திலேயே பதிலையும் சொல்லியிருக்கிறீர்களே!

விஜயன், மதுரை

ஜி. வரலக்ஷ்மி ஏன் குத்துச் சண்டை வீரரை மணந்து கொண்டிருக்கிறார்?

சண்டையை யெல்லாம் மேடையில் போட்டுவிட்டு, வீட்டுக்கு வரும் போது சமாதானமாக வருவாரல்லவா?

கே. டி. கந்தசாமி, கள்ளிக்கோட்டை

செங்கோட்டைச் சிங்கம், ஜிம்போ, யா. வ. வானம்பாடி இவற்றில் சிறந்த படம் எது?

ஜிம்போ தான்.

இ. எம். எஹ்ஜா, பாண்டிச்சேரி

'சபாஷ் 'ராமு' வில் எம். என். ராஜம் பேசுவது சொந்தக் குரலிலா அல்லது இரவல் குரலிலா?

இரவல் குரல்தான்! தெலுங்குப் பதிப்பில்கூட இரவலில்தான் பேசியிருக்கிறார்!

'பொன்னு விளையும் பூமி'யில் டி.எஸ். பாலய்யா, ஜெமினி கணேசனுக்கு முடி வெட்டுகிறாரே, அதுபோல எனக்கு முடிவெட்ட அழைத்தால் வருவாரா?

'முடி' வேதும் இல்லையா இதற்கு என்று கேட்பார்!

சினிமா உலகில் தோன்றும் அழகிய நக்ஷத்திரம் யார்?

'மேக்-அப்' அறையிலிருந்து-'மேக்-அப்' முடிந்து வெளிவருபவர்.

கலைக்காவலன், மரக்காணம்

'மரணத்தை வென்ற மனிதன்' யார்?

அதை எடுத்துக் காட்டத்தான் பார்கவி பிலிம்ஸார் ஒரு படத்தையே எடுத்து வருகிறார்களே!

இவள் சிரிப்பிலே கபடு பிரதிபலிக்கிறது! இவள் நல்லவள் அல்ல! சுகீபவா புரொடக்ஷன்ஸாரின் "பக்த சபரி" படத்தில் எல். விஜயலக்ஷ்மி.

டி. எஸ். சுகவனம், சேலம்

தமிழ் நாட்டின் வால்ட் டிஸ்னே யார்?

தானுதான்! மாலினியில் அவரது முயற்சியில் உருவான கார்ட்டூன் படத்தை யார் மறக்க முடியும்?

புரட்சி நடிகரின் புகழ் பாடும் ஏடு நடிகன் குரல்; இலட்சிய நடிகரின் புகழ் பாடும் ஏடு கலைப்பூங்கா; நடிகர் திலகத்தின் புகழ் பாடும் பத்திரிகை பேசும் படம் என்கிறேன் நான். உங்கள் கருத்து என்ன?

நீங்கள் நுனிப்புல்லை மட்டும் மேய்ந்திருக்கிறீர்கள். உங்கள் கணக்கு தவறான விடையையே தந்திருக்கிறது.

பி. சரோஜாதேவி எத்தனை ஹிந்திப் படங்களில் நடிக்க ஒப்பந்தமாகியிருக்கிறார்?

இரண்டு. ஒன்று ஹிந்தி கல்யாண பரிசு; மற்றொன்று கே. பி. லால் தயாரிக்கும் படம்.

ஜிக்கி தற்போது ஏன் அதிகமாகப் படங்களில் பாடுவதில்லை?

வீட்டில் தாலாட்டுப் பாட்டுப் பாடவேண்டி யிருப்பதால்!

வே. கபிலன், திருக்கோணமலை

டைரக்டர் பீம்சிங்குக்கும் பத்மினி-ராகினியுடன் நடனமாடி வந்த சுகுமாரிக்கும் 'திடீர் திருமணம்' நடந்ததாக ஒரு பத்திரிகையில் படித்தேன். நீங்கள்...?

நானும் அதைப் படித்தேன்!



போட்டோ :
திருச்சி அருணாசலம்.



பார்வை இழந்த அவன் ஒரு கவிஞன்; அவளோ பணம் படைத்தவள்; கணவன் குருடன் என்பதை அறியாதவள். மனக் கண்ணால் தன் மணக் கோலத்தைக் கண்ட அவனது இன்பக் கனவுகளைக் கலைக்க வருகிறாள் அவள். முடிவு? - விஜயா ஆர்ட்ஸ் வேகமாகத் தயாரித்து வரும் 'பிறந்த நாள்' தமிழ்ப் படத்தில் எம்.என். ராஜம்-பிரேம்நசீர்.



பேட்டி : குமார்

1954-ம் வருஷம் டிசம்பர் மாதம் 31-ம் தேதி காலை 9-மணி இருக்கும். பாலாஜி நகரிலுள்ள ஏவி. மெய்யப்பன் அவர்களுடைய வீட்டுக்குச் சென்றேன். என் அதிர்ஷ்டம் அவர் அதிக அலுவல்களின்றி ஓய்வாக இருந்தார். ''கோவையிலிருந்து வருகிறேன். நான் ஒரு நடிகன். தங்களுக்கு என் திறமையில் நம்பிக்கை ஏற்பட்டபின் சந்தர்ப்பம் கொடுங்கள்'' என்றேன். திடீரென்று அவர்முன் நான் நின்று பேசியதில் அவருக்கு என்ன தோன்றியதோ என்னவோ, ''பதினோரு மணிக்கு ஸ்டுடியோவில் வந்து பார்'' என்றார்.

சரியாக பதினோரு மணிக்கு

ஒளி தெரிகிறது

ஏ.கே.மோகன்

ஸ்டுடியோவுக்குச் சென்றேன். 'மேக்-அப்' டெஸ்ட் நடைபெற்றது. செட்டியாரும் வந்திருந்தார். அப்படி அவர் வருவது அதுதான் முதல் தடவை என்றார்கள். இரண்டாம் தடவையும் டெஸ்ட் நடைபெற்றது. கே. சங்கர்தான் என்னை ஆட்டுவித்தார். மாருதிராவ் படமாக்கினார். எஸ். டி. சுந்தரத்தின் இளங்கோ நாடக மன்றத்தின் மகா புத்திசாலி, டாக்டர், மனிதனும் மிருகமும், இன்பம் எங்கே ஆகிய நாடகங்களில் நான் நடித்து வந்தேன். அவற்றிலிருந்து சில பகுதிகளை நடித்துக் காட்டினேன். சுமார் ஐநூறு அடி படமாக்கினார்கள். ''இரண்டுநாள் கழித்துச் சொல்லி அனுப்புகிறேன்'' என்றார் செட்டியார்? 'பிறகு சொல்லியனுப்புகிறேன்' என்றால் 'இல்லை' என்று அர்த்தம் என்பது நான் கண்ட அனுபவம். ஆகவே ஏமாற்றத்துடன் திரும்பினேன். ஆனால் எதிர்பாராதது நடந்தது!

மூன்று தினங்கள் கழித்து ஏவி. எம். மிலிருந்து அழைப்பு வந்தது. ஒரு வருடத்திற்கு மாதச் சம்பள நடிகனாக ஒப்பந்தமானேன். ''நாக தேவதை'' படத்திற்காக முதல் ஒப்பந்தம் என்னுடையதே. முதல் நாள் படப்பிடிப்பிலும் நடித்தது



நான்தான். முதன் முதலில் காமிராவுக்கு முன் நின்றதும் நானே. நாகுலசவுதி, ஆதர்ஷசதி, தெலுங்கு கன்னடம் இரு பாஷைப் படங்களிலும் நானே பேசி நடித்தேன். தமிழ் டப்பிங்குக்கும் நானே என் பாகத்திற்குக்குரல் கொடுத்தேன். 1955-56 ஆண்டில் நானும் ஜமுனாவும் பிரதம பாகங்களில் நடித்த அந்தப் படம் ஒரே சமயம் 125 இடங்களில் திரையிடப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கதாகும். அதே ஆண்டில் எனக்கும் என் உறவினளான கிருஷ்ண வேணிக்கும் திருமணம் நடைபெற்றது. எனவே அந்த ஆண்டு எனக்கு மகிழ்ச்சிகரமான ஆண்டாக இருந்தது. ஆனால் நான் அதனால் மகிழ்ந்து போய்விடவில்லை. காரணம்? அடிக்கடி இப்படிப்பட்ட



ஏற்றமும் இறக்கமும் என் வாழ்வில் இருந்ததுதான்.

கோவையில் புகழ்பெற்று விளங்கும் கண்ணன் போட்டோ ஸ்டுடியோ முதலாளி கண்ணன் அவர்களுக்கும் அவர் மனைவி ராஜம்மாளுக்கும் பிறந்த மூன்று குழந்தைகளில் கடைக்குட்டியாக ஒரே மகனாக 22-3-1929-ல் பிறந்தேன் நான். எஸ். எஸ். எல். ஸி. வரை படித்தேன்.

அதற்கு முன்பே, அதாவது என் 8-வது வயதிலேயே படங்களில் நடித்தேன். எஸ். டி. எஸ். யோகி என் தகப்பனாரின் நெருங்கிய நண்பர். அவர் பால முருகன் வேடத்திற்கு என்னை நடிக்க வைக்க என் தந்தையிடம் அனுமதி பெற்றார். மயூரா பிலிம்ஸாரின் ''பக்த அருணகிரி நாதர்'' படத்தில் யோகி டைரக்ஷனில் பால முருகனாகவும் ஹாஸ்யத் துண்டுப் படத்தில் அனாதைச் சிறுவனாகவும் நடித்தேன். கோலாப்பூரில் படப்பிடிப்பு நடைபெற்றது. அதன் பிறகு முசிரி நடித்த 'துக்காராம்' திருச்சி காரனேஷன் பிலிம்ஸ் ''திலோத்தமா'' ஆகியவற்றில் பால வேடங்களில் நடித்தேன். திலோத்தமாவில் பாடியுமிருக்கிறேன். பிறகு படிப்பைத் தொடர்ந்தேன்.

எஸ். எஸ். எல். ஸி. முடிந்ததும், அதாவது 1945-ம் வருஷம் என் தந்தையின் கிருஷ்ணா பேகரியின் பொறுப்பை ஏற்றுக்கொண்டு வியாபாரத்தைக் கவனிக்க ஆரம்பித்தேன். அதற்கு இரண்டொரு வருடங்களுக்கு முன்புதான் என் மூத்த சகோதரிகள் பத்மாவதி, லீலாவதி இருவரையும் பிரபல நடிகர் டி. எஸ். பாலையா மணந்து கொண்டார்.

எனக்கு அப்போதெல்லாம் சினி

மாவில் நடிக்க வேண்டுமென்ற ஆசை கிடையாது. சங்கீதத்தில் தேர்ச்சி பெற விரும்பினேன். சங்கீதப் பயிற்சி பெற்று ஹையர் கிரேட் டிப்ளமாவும் வாங்கினேன். 1951 வரை வியாபாரத்தைக் கவனித்து வந்தேன். அப்போதெல்லாம் கூப்பன் முறை அமுலிலிருந்தது. ரொட்டி சாப்பிடும் பழக்கமுள்ளோரின் பாடு திண்டாட்டமாயிருக்கும். அப்போது ரொட்டி வாங்க கடைக்கு வரும் கலைஞர்கள் பலர் எனக்கு நண்பர்களானார்கள். ஏ. எஸ். ஏ. சாமி, ஜி. எம். பஷீர், சுந்தர்ராவ் நட்கர்ணி முதலியோர் எனக்கு அறிமுகமானார்கள். ஆகவே எனக்குப் படங்களில் நடிக்க விருப்ப மேற்பட்டது.

அப்போது பஷீர் பெலிகன் பிக்சர்ஸாருக்காக ''புயல்'' படத்தைத் தயாரிக்க முற்பட்டிருந்தார். அவர் என்னிடம் கூற, நான் என் தாயிடம் கேட்க, தாயார் தகப்பனாரிடம் கூற, ''உள்ளூர்தானே, பரவாயில்லை, நடிக்கட்டுமே'' என்று அவர் சொல்ல, நான் 'புய'லில் நடித்தேன்.

'புயல்' படத்தில் இரண்டாவது கதாநாயகனாக நான் நடித்தேன். அப்படத்தின் சில பகுதிகளைப் பார்த்த சுந்தர் ராவ் நட்கர்ணி ஜூபிடர் அதிபர்களில் ஒருவரான சோமுவிடம் சிபார்சு செய்ய, நான் ஜூபிடரின் 'அழகி'யில் நடிக்க ஒப்பந்தமானேன். கோவையிலும் பிறகு சென்னையிலுமாக 'அழகி'யில் நடித்து முடித்தேன்.

கோவையிலிருக்கும்போது டைரக்டர் ராம்னாத் என்னிடம் மிகவும் அன்பு பாராட்டி வந்தார். சென்னையில் நான் அழகியில் நடித்து வந்த போது ராம்னாத்தை சந்தித்தேன். நியூ இராவின் சார்பில் ''விடுதலை'' என்ற படத்தை தமிழ், ஹிந்தி இரு பாஷைகளிலும் தயாரிக்கத் திட்டமிட்டிருந்தார் அவர். ''சென்னையிலே தங்கிவிடேன். உனக்கு நல்ல எதிர்காலம் கிடைக்கும்'' என்றார். என் பெற்றோர், அவர்களது ஒரே பிள்ளையான நான் அவர்களைப் பிரிந்து சென்னையில் தங்குவதை விரும்பவில்லை. எனக்கோ சினிமாப் பைத்தியம். கடைசியில் என் பெற்றோரைச் சமாதானப்படுத்தி 'விடுதலை' படத்தில் நடிக்க சென்னையில் தங்கினேன். அப்போதே 'பத்மினி' 'மதியும் மமதையும்' படங்களில் நடிப்பதற்காக அடிக்கடி கோவை சென்று வந்தேன்.

பிறகு எதுவும் வேலையில்லை. நானும் எட்டாவது வயது முதல் படங்களில் நடித்து வருகிறேன். இருந்தும் தகுந்த சந்தர்ப்பமோ, தேவையான புகழோ கிட்டவில்லை. மனமுடைந்த நிலையில் ஒளியைத் தேடி அலைந்தேன். அப்போதுதான் ஏவி. எம். அவர்களைச் சந்தித்து நிரந்தர நடிகனாக ஒப்பந்தமானேன்.

எம்.ஏ. வேணு அவர்களை எனக்கு முன்பே பழக்கமுண்டு. அவர் 'சம்பூர்ண ராமாயணம்' படத்தைத் தயாரிக்க முற்பட்டபோது என்னை சத்ருக்னன் வேடத்தில் நடிக்க அழைத்தார். நான் ஏவி.எம்.மிடம் அனுமதி பெற்று வெளியேறி ராமாயணத்தில் நடித்தேன். அப்போதெல்லாம் சிவாஜி கணேசன் எனக்கு மிகவும் உற்சாகமூட்டி வந்தார். ராமாயணம் படத்திற்குப் பின் படங்கள் எதுவுமில்லை. மீண்டும் இருள் சூழ்ந்தது.

துன்பம் தொடர்ந்துவரும் என்பார்கள். ராமாயணம் முடிந்த பின் படங்கள் இல்லை. என் தாயார் காலமாகி விட்டார்கள். உடனே என் முதல் மகனும் இறந்து விட்டான். இருள் கவ்விய என் இதயம் விம்மியது. ஒளியைத் தேடி மீண்டும் அலைந்தேன்.

தண்ணீரில் மூழ்க விருப்பவனுக்கு மரப்பலகை கிடைத்தாற்போல, என்னை தன்னுடன் தங்க வைத்து ஆறுதல் கூறினார் டி.எஸ். பாலையா. அப்போதும்கூட நான் நடிக்க அவரை உதவி கேட்கவில்லை. அவருக்கும் சரியாகத் தெரியாது.

பாலையா உத்திரா பிலிம்ஸ் என்ற பெயரில் ஒரு படக்கம்பெனியை ஆரம்பித்திருந்த சமயம் அது. ''சுவீகாரம்'' என்ற படம் ஆரம்பிக்கப்பட்டிருந்தது. ஒருநாள் திடீரென்று என் அத்தான் பாலையா

என்னை அழைத்தார். "ஸ்டுடியோவுக்கு வா!" என்றார். என் பிரமிப்பு நீங்குவதற்குள் நான் ஸ்டுடியோ சென்று விட்டேன். அங்கே வசனம் கொடுத்தார். 'மேக்-அப்' போடச் சொன்னார். எல்லாம் கண்கட்டு வித்தை போலிருந்தது. 'சுவீகாரம்' படத்தில் பாலையா, தங்கவேலு, கண்ணாம்பா இவர்களுடன் நான் நடித்தேன். அன்றுதான் என் நடிப்பை முதன் முதலாக பாலையா பார்க்கிறார். ஆகவே மிகவும் சிரமப் பட்டு நடித்தேன். "நல்லா நடிக்கிறியே" என்று பாராட்டி உற்சாகமூட்டினார். பிறகு அவர் மூலம் எனக்கு சந்தர்ப்பங்களும் கிடைத்து வருகின்றன. அதேசமயம் மெஜஸ்டிக் பிலிம்ஸார் "நாட்டுக்கொரு நல்லவள்" படத்தில் நடிக்க என்னை ஒப்பந்தம் செய்தனர். பிறகு "ஓடி விளையாடு பாப்பா" படத்திலும் நடித்தேன். 'ஓடி விளையாடு பாப்பா'வில் என் நடிப்புத் திறனை யாவரும் பாராட்டினார்கள்.

தற்போது பாண்டியன் பிக்சர்ஸாரின் தயாரிப்பு நெ. 1, அர்ஜுனன் பிக்சர்ஸின் 'புன்னகை சொன்ன கதை', ஸ்புட்னிக் பிக்சர்ஸின் "வீரமங்கை வேலுநாச்சியார்", கலாமஹாலின் "குருடன் கேட்டது ஒரு கண்" முதலிய படங்களிலும் 'சுவீகாரம்' படத்திலும் நடித்து வருகிறேன்.

படங்களில் வாயசைப்பவரே பாடவும் செய்தால் நன்றாக இருக்கும். நான் சங்கீதப் பயிற்சி பெற்றவன். ஆனால் பாடுவதில்லை. சாரீரத்தை வழிக்குக் கொண்டு வந்தால் நாமே பாடலாம் என்பதற்காகத் தினசரி சாதகம் செய்து வருகிறேன். புகைப்படக்கலை எங்கள் பரம்பரை சொத்து. படமெடுப்பதில் எனக்கு நல்ல பயிற்சியுண்டு. ஒருவர் நினைப்பதையும் எழுதுவதையும் குறிப்பறிந்து சொல்லும் திறன்பெற்று 'எக்ஸ்ரே கண்கள்' படைத்தவர் எனப்புகழப்படும் அஹமத் அலியிடம் நான் பயிற்சி பெற்றேன். பாலையா என்னிடம் பந்தயப் வைத்து நூறு ரூபாய் தோற்றார்! பிலியர்ட்ஸ் விளையாடுவதில் எனக்கு நல்ல பழக்கமுண்டு. கால் பந்து விளையாட்டில் நான் ஏராளமான பரிசுகள் பெற்றிருக்கிறேன்.



ஸ்புட்னிக் பிக்சர்ஸாரின் "வீரமங்கை வேலுநாச்சியார்" தமிழ்ப் படத்தில் மோகன்.

குதிரை ஏற்றம், கார், சைக்கிள், மோட்டார் சைக்கிள்களில் நல்ல தேர்ச்சியுண்டு. படங்கள் நிறைய பார்ப்பேன்.

படக்கதாநாயகர்கள் நடிப்பதையெல்லாம் பற்றி வீடு வந்ததும் குறிப்பெழுதி வைப்பேன்! சித்திரக் கலைஞர் மணியம்தான் இப் பழக்கத்தைக் கைக்கொள்ளச் செய்தவர். சந்தர்ப்பம் கிடைக்கும்போது இந்தக் குறிப்புகள் பெரிதும் உதவியாக இருக்கும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. ஏராளமான துப்பறியும் நாவல்கள் படிப்பது என் மிகச் சிறந்த பொழுது போக்காகும்.

எல்லாத்துறையிலும் பயிற்சி இருந்தால் எதைக் கொடுத்தாலும் திறம்படச் செய்ய முடியும் என்ற நம்பிக்கை எனக்குண்டு. இப்போதுதான் என்னைச் சூழ்ந்திருக்கும் இருள் விலகி நம்பிக்கை என்ற ஒளி பிறப்பதைக் காண்கிறேன். ஒளி தெரிகிறது. இனி நான் தடுமாறாமல் முன்னேறுவேன் என்ற நம்பிக்கை என்னுள்ளே எழுகிறது. ★

பொன் நகையை விடப் புன்னகையே ஆண்களைக் கவரும் என்பதைப் புரிந்து கொண்டு ஆண்கள் சமுதாயத்தைப்பற்றி அலக்ஷியமாகச் சிரிக்கிறாள் இவள். சிவகாமி பிக்சர்ஸ் “குமார ராஜா”வில் எம். என். ராஜம்.

டி.எஸ்.ஆர் & கோ
கும்பகோணம்
GOKUL
SANTOL
TOILET POWDER
T.S.R'S
GOKUL
SANDAL
WOOD
TOILET POWDER

தபால் பெட்டி

*கலை இங்கே

சமீபத்தில் பாரத நாட்டுக்கு விஜயம் செய்தார் மாபெரும் தலைவர் அமெரிக்க ஜனாதிபதி, ஐசன் ஹோவர். வேற்று நாட்டுத் தலைவர்களோ, மக்களோ இங்கு வந்தால் அவர்களுடைய ஆயிரமாயிரம் அலுவல்களுக்கிடையே மன நிறைவை ஏற்படுத்த, சில கலை நிகழ்ச்சிகள் ஏற்பாடு செய்யப்படுகின்றன. ஜனாதிபதி ஐசனோவர் வந்தபோதும் அவர் இன்பமாகப் பொழுதுபோக்க, கலை நிகழ்ச்சிகள் நடைபெற்றன. இயல் இசை, நாடகம் இவற்றுக்குத் தனித் தன்மைபெற்ற தமிழகத்துக் கலா மணிகள்தான் அமெரிக்க ஜனாதிபதிக்கு மன நிறைவை ஏற்படுத்தக் கூடியவர்களென்று பாரத அரசாங்கம் தீர்மானித்து, திருமதி எம்.எஸ். சுப்புலக்ஷ்மியை பாடவும் கமலா லக்ஷ்மண், வைஜயந்திமாலா இருவரையும் ஆடவும் தேர்ந்தெடுத்து முக்கியத்துவமளித்தது. இது தமிழகம் பெருமைப்படத்தக்க நிகழ்ச்சியாகும். ஆனால் ஜோகர் போன்ற வட நாட்டு வெறியர்கள் நம்மைக் கேலி செய்கிறார்கள், மலையைப் பார்த்து நாய் குலைப்பதுபோல. பரிதாபம் கொள்ளுகிறேன், இந்த வெறியர்களைக்கண்டு.

அன்புதாசன்,
வேட்டைக்காரன்புதூர்.

'ஆட்களை, சிலைபோல் நின்று ஏமாற்றியாயிற்று. இனி என்ன செய்வது?' என்று யோசிக்கிறார் இவர்! மேகலாவின் ''குறவஞ்சி''யில் நடிகர் திலகம் சிவாஜி கணேசன்.

**பொறுப்பு யாருடையது?

ஒரு திரைப்படத்தின் வெற்றிக்கு முழு முதற் காரணமாக இருப்பவர் தயாரிப்பாளர்தான். இந்தக் கருத்து பல ஆண்டுகளாகக் கூறப்பட்டு வருகிறது. இருந்தும் நம்நாட்டுத் தயாரிப்பாளர்களில் பெரும்பாலோர் இதைப்பற்றிச் சிந்தித்துச் செயல்படுத்தவில்லை. ஹாலிவுட்டில் 'பட்டி அட்லர்' என்ற தயாரிப்பாளர் 'கிளியோ பாத்ரா' என்ற படத்தைத் தயாரிக்க வந்தார். முதலில் 'கிளியோ பாத்ராவின் வாழ்க்கையும் காலமும்' என்ற நாலின் உரிமையை விலைக்கு

* முதற் பரிசு ரூ. 15.   ** இரண்டாம் பரிசு ரூ. 10

வாங்கினார். அடுத்து 'நிகல் பால்ஸ்' என்ற எழுத்தாளரை அழைத்து, அவருடன் விவாதித்து திரைக்கதை வசனங்களை அமைத்திருக்கிறார். பின் தகுதியுள்ளவர் யார் என்று தேடி, 'கிளியோபாத்ரா' பாகத்தில் சோபிக்கக்கூடியவர் என்று எலிசபெத் டெய்லரை தேர்ந்தெடுத்து நாற்பத்தி ஏழு லட்சம் கொடுத்து ஒப்பந்தம் செய்தார். இனிமேல் தான் டைரக்டரைத் தேடிப் பிடிக்கப் போகிறார்.

இந்தச் செய்தி தயாரிப்பாளரின் கடமையையும் திறமையையும் பெருமையையும் வெளிப்படுத்துகிறது. "செய்வன திருந்தச் செய்" பழமொழி நமக்குத் தெரியும். ஆனால் இதைப்போல் எத்தனைபேர் செயல்படுகிறார்கள்? நல்ல முயற்சி வெற்றி பெற்றுத்தானே ஆகவேண்டும்? தயாரிப்பாளர்கள் இப்படியெல்லாம் செயல்பட்டால் நம் படவுலகம் வெற்றிக்கொடி நாட்டுவது நிச்சயம்.

ஏ. பி. முகம்மது,
தலைஞாயிறு.

உலக நடிகர்

சிவாஜி கணேசன் தமிழ்ப் படங்களில்தான் நடித்து வருகிறார். ஆனால் உலகமெங்கும் அவர் புகழ் பரவி விட்டிருக்கிறது. இங்கிலாந்து தேசம் பாரதநாட்டை அடிமைப்படுத்த முயன்றபோது, எதிர்த்த மாவீரன் கட்டபொம்மன். அவனது வரலாற்றுப்படம் 'கட்டபொம்மன்' லண்டன் மாநகரிலே திரையிடப்பட்டுப் பாராட்டும் பெற்றது. தம்முன்னோரின் கொடுமையைச் சித்தரித்து தம் நாட்டைக்கேலி செய்யும் மாஜி அடிமை நாட்டு வீரன் வரலாற்றுப் படத்தை கலை என்ற காரணத்திற்காகப் பாராட்டும் பண்பு பெற்றிருக்கின்றது இங்கிலாந்து நாடு. திறமை எங்கிருந்தாலும் அறிவாளி பாராட்டுகிறான். ஆகவே தான் உலகப் புகழ்பெற்றதும் லண்டன் மாநகரிலிருந்து வெளிவருவதுமான டைம்ஸ் பத்திரிகை சிவாஜி கணேசனின் திறமையை இனமொழி நாடு வேறுபாடுகள் பாராமல் 'உலக நடிகர்' எனப்புகழ்ந்து பாராட்டி யிருக்கிறது. இந்தப் பண்பு நம்நாட்டு மக்கள் சிலரிடையேயும் பத்திரிகைகள் சிலவற்றிடையேயும் இல்லையே! கணேசன் தமிழகத்துச் சொத்தல்ல. உலகத்தின் மதிப்பிட முடியாத மாபெரும் சொத்து. இனியாவது தவறியவர் திருந்துவரா?

ஆ. குறள்வாணன்,
கோவை.

நீண்ட பாடல்கள்

சமீபத்தில் சில தமிழ்ப் படங்களைப் பார்த்தேன். கதையில் ஒட்டாத சில நடனப்பகுதிகளைச் சேர்த்துஅதற்காக பத்து, பதினைந்து நிமிடங்கள் வரும் ஒரு பாடலையும்

தொண்டை
மற்றும் மார்பு
உபாதைகளுக்குக்
குணமளிக்கும்

பெப்ஸ்
வில்லைகளை
உட்கொண்
டால், உங்கள்
இருமல் உடனேயே அகலும்

பெப்ஸ் வில்லைகளைச் சுவைத்து. குணமளிக்கும் ஆவி போன்ற அதன் சத்து வேதனையைக் குறைக்கவும், தொண்டைப் புண், ப்ராங்கைடிஸ், இருமல் மற்றும் ஜலதோஷத்திற்கும் காரணமான கிருமிகளைக் கொல்ல உதவியளிப்பதற்கான வேலையைச் செய்வதை உணருங்கள், உடனடி நிவாரணமளிக்க்வும், கிருமிகளை அகற்றவும பெப்ஸ் உதவி புரிகிறது.

பிராங்கைடிஸ்.
தொண்டைப்
புண், மண்டை
நீர், அடைப்பு,
ஜலதோஷம் மற்
றும் இருமலுக்கு
உடனேயே நிவா
ரணமளிக்கிறது.

எல்லா மருந்து
வியாபாரிகளிடமும
கிடைக்கும்.

ஸி. இ. புல்போர்ட் (இந்தியா) பிரைவேட் லிட்.

FPY-55-TAM

சோல் ஏஜெண்டுகள்:
தாதா & கோ.,
86, நைனியப்ப நாயக்கன் தெரு,
சென்னை-3.

சேர்த்து விடுகிறார்கள். இந்தப் பாடலும் நடனமும் ஆரம்பமாகும் போது, அதுவரை படத்திலிருந்த சுவையும் விறுவிறுப்பும் போய் விடுகின்றன. பிறகு நடனமும் பாட்டும் முடிகின்றன. ஆனால் இழந்த சுவையும் விறுவிறுப்பும் மீளுவதில்லை. பல படங்களின் தோல்விக்கான முக்கிய காரணங்களில் இது குறிப்பிடத்தக்கதாகும். காட்சியின் அமைப்பை யொட்டி ஒரு கருத்துள்ள பாடல் இனிய இசையுடன் இருந்தால் அது மேலும் சுவை கூட்டும். 'கல்யாண பரிசு' படத்தின் வெற்றிக்கான காரணங்களில் இதுவும் ஒன்று. நடனமும் பாடலும் அலுத்துவிட்டது ரசிகர்களுக்கு. இதை படாதிபதிகள் உணராதது ஏன்?

எஸ். காந்திமதி,
கொச்சி.

தமிழர் பெருமை

குஜராத்தி நாட்டுப் பாடல் என்ற செய்திப் படம் பார்த்தேன். குஜராத்தி மக்களின் வாழ்க்கை முறை, நாட்டுப் பாடல்கள், அந்நாட்டுக் கவிஞர்கள் பற்றிய விவரங்களைச் சித்தரிக்கும் அந்தச் செய்திப்படம் எனக்கு மனமகிழ்ச்சியையும் மனவருந்தத்தையும் கொடுத்தன.

தமிழகத்தின் இயற்கை வளமும் கலைத்திறனும் கவிஞர்களும் அவரது பாடல்களும், எளிய - அதே சமயம் சீரிய வாழ்க்கை முறைகளும், இயல், இசை, நாடகம், சிற்பம்போன்ற துறைகளில் உள்ள சிறப்பும், எல்லாவற்றுக்கும் மேலாகத் தமிழக மக்களின் விருந்தோம்பும் குணமும் மிக மிக மேம்பட்டவை. பிறநாட்டினர் இங்கு வந்து திரும்பியதும் இவைகளைப் பற்றித்தான் அதிகம் புகழ்ந்திருக்கிறார்கள். இவற்றை யெல்லாம் தொகுத்துச் செய்திப்படமாக்கித் திரையிட்டால் தமிழகத்தின் பெருமையை யாவரும் அறிய முடியுமல்லவா? சென்னை அரசினர் இதற்கான முயற்சி எடுக்கவேண்டும். தமிழர் மூலம்தான் அயல் நாடுகளில் இன்றுவரை பாரத கலாசாரப் பெருமை உயர்ந்திருக்கிறது என்றால் மிகையாகாது. மாநில சர்க்கார் ஆவன செய்வார்களா?

கி. சுந்தரராமன்,
குண்டக்கல்.

பிற்பகல் காட்சி

‘‘பிற்பகல் காட்சி பற்றிய செய்தி கண்டு வருந்தினேன். சென்ற இதழில் தாங்கள் வெளியிட்டிருக்கும் ‘மந்திரியின் யோசனை’ என்ற கடிதம் ஓரளவு மன நிம்மதியைக் கொடுக்கிறது. சினிமாவினால் மாணவர்கள் பள்ளிக்குச் செல்வதில்லை என்ற குற்றச்சாட்டு மிகவும் தவறானது. பழி யொருபுறமும் பாவ மொருபுறமும் என்பார்களே அது போலருக்கிறது சினிமாவைப் பழிப்பது. அரசாங்கம் பிற்பகல் காட்சியைத் தடை செய்யாது என்றே நம்புகிறேன்.

வி. கிருஷ்ணமூர்த்தி,
கடவாசல்.

நல்ல செயல்

ஒரு படம் நூறுநாள் ஓடிவிட்டால் அதைப் பல வழிகளில் தடபுடல் செய்கிறார்கள். பெரிய ஓட்டல்களில் பிரமுகர்களையும் பத்திரிகையாளர்களையும் அழைத்து விருந்து வைக்கிறார்கள். இது கூடாது என்று சொல்லவில்லை. ஆனால் ஏழைகளை மறந்து விடுகிறார்கள். இதற்கு மாறாக வீனஸ் பிக்சர்ஸார் ‘கல்யாண பரிசு’ வெற்றி விழாவின்போது, ஏழைகளுக்கு அன்னதானம் செய்தார்கள். ‘வயிறு வாழ்த்தவேண்டும்’ என்பார்கள் பெரியவர்கள். அதுதான் உண்மையான ஆசி என்று கொள்வது தமிழ்ப் பண்பு. ஆகவே வீனஸ் பிக்சர்ஸாரைப் பாராட்டு

‘‘இங்கே சூரியனின் கொடுமை தாங்கவில்லை. வாருங்கள் சப்ரமஞ்சத்திற்குச் செல்வோம்’’ என்கிறாள் மும்தாஜ்மஹால். ஆக்ரா கோட்டையில் ‘‘பாவை விளக்கு’’ படத்திற்காக, ஸ்ரீ லக்ஷ்மி பிக்சர்ஸார் படமாக்கிய காட்சியில் எம். என். ராஜமும் - சிவாஜி கணேசனும்.

இவள் ஒரு வனமங்கை. பிறகு இவள் சபரி யாகிருள் போலும்! சுகீபவா புரொடக்ஷன்ஸ் தயாரிக்கும் ''பக்த சபரி''யில் பண்டரிபாய்.

கிறேன். லக்ஷக்கணக்கில் புரளும் படவுலகம் ஏழைகளையும் கொஞ்சம் கவனிப்பது வரவேற்கத்தக்கதாகும். இந்த நல்ல செயலை எல்லோரும் செய்ய முன்வரவேண்டும்.

வை. சுரேஷ்குமார்,
சென்னை.

புதுக்குரல் தேவை

எப்போதும் எல்லாவற்றிலும் மாற்றம் தேவை. அயிட்டங்கள் மாற மாறப் பொலிவும் கவர்ச்சியும் ஏற்படும். திரையுலகில் சில நடிகர்களையே பார்த்து அலுத்துப் போன நாம் சில புதுமுகங்களைக் காண்கிறோம். அந்த மாறுதல் வரவேற்கத் தக்கதுதான். ஆனால் குறிப்பிட்ட சிலரே பின்னணியில் பாடி வருகிறார்கள். 'இன்னார் பாடுகிறாரா அதில் பாடினாரே, அதே போலத்தான் இருக்கும்' என்ற அலுப்பு ஏற்படுகிறது. சிலர் ஒரு பாணியைக் கையாண்டால் அதே பாணியில் தான் பாடச் செய்கிறார்கள். ஆகவே குரல் வசதி படைத்தோரை பெரும் அளவில் தேடிப்பிடித்துப் பின்னணியில் பாடச்செய்ய வேண்டும். மாற்றம் விரைவில் ஏற்படவில்லையென்றால் பின்னணிக் குரலுக்கு மதிப்பு போய் விடும்.

கே. எஸ். சக்கரவர்த்தி,
மதுரை.

''அம்மா அச்சா......பூச்சி'' என்பார்களே, அப்படிப் போஸ் கொடுக்கும் புதுமுகம் லலிதா 'வனமோஹினி'யில் நடித்து வருகிறார்.

கதை எங்கே?

சென்ற ஆண்டில் ஏராளமான படங்கள் வந்தன. வந்த சுவடு தெரியாமல் ஓடியும் விட்டன. இந்த அவல நிலைக்குக் காரணம் என்ன? ஆர்வம், கதை, புதுமை, பொறுமை இவை இல்லாததுதான். அருணாசலம் பிக்சர்ஸாரின் 'தை பிறந்தால் வழி பிறக்கும்' படம் வெற்றி பெற்றது. ஆனால் பெரிய கோயிலும், காவேரியின் கணவனும் ஓடவில்லை. எம். ஏ. வி. யின் முதலாளி வெற்றி பெற்றது. ஆனால் மாதவியும் பாஞ்சாலியும் மக்கள் நினைவில்கூட நிற்கவில்லை. இதே போலத்தான் பலரது நிலையும். தை பிறந்தால் வழி பிறக்கும், முதலாளி ஆகிய படங்களில் இருந்த கதை, கருத்து, புதுமை, ஆர்வம் இவை அவர்களது மற்ற படங்களில் இல்லை. அத்துடன் குறுகிய காலத்தில் நிறைய படங்களைத் தயாரித்தனுப்பிவிட வேண்டும் என்ற அவசரம் இவர்களிடம் காணப்படுகிறது. தரமுள்ள படங்களைத் தயாரிப்பதனால் கால தாமதம் பற்றிக் கவலையில்லை. நல்ல கதையைத் தேர்ந்தெடுக்க வேண்டும். செய்வார்களென்று எதிர்பார்க்கலாமா?

இரா. பரணிதரன்,
குமதி.

ஆசை நிறைவேறுமா?

1958-ம் ஆண்டின் சிறந்த படம் என்று 'நாடோடி மன்னன்' படம் 'பேசும் படம்' ஆசிரியக் குழுவினரால் தேர்ந்தெடுக்கப்பட்டது. எம். ஜி. ஆர். தயாரித்து, டைரக்ட் செய்த அந்த முதல் படம் அவருக்கு மகத்தான வெற்றி தந்தது. இதே போல ;1959-ம் ஆண்டில் "கல்யாண பரிசு" மகத்தான வெற்றிப்படமாக அமைந்தது. ஸ்ரீதர் கதை-வசனம் தயாரிப்பு இவற்றுடன் முதல் தடவையாக டைரக்ஷன் பொறுப்பேற்ற படம் அது. ஏ. எம். ராஜா முதல் தடவையாக சங்கீத டைரக்டரானதும் அதில் தான் இவற்றுடன் அது வெள்ளி விழாவும் கொண்டாடியது. கதை, வசனம், பாடல் ஒளிப்பதிவு, இசை, டைரக்ஷன் நடிப்பு முதலிய பிரிவுகளில் ஈடுபட்டிருந்தோர் அனைவரும் இளைஞர்கள். இளைஞர் சமுதாயத்தின் திறமைக்கு எடுத்துக்காட்டாக விளங்கிய அந்தப் படத்தை சிறந்த படம் என்று தேர்ந்தெடுப்பீர்களா?

'பேசும் படம்' என்ன செய்யப் போகிறது 'என்பதை ஆவலுடன் எதிர்பார்த்துக் கொண்டிருக்கிறேன்.

பி. புருஷோத்தமன் நாயர்,
நெய்யாட்டின்கரை.

இவள் கையிலிருக்கும் பொருளையும் தோற்றத்தையும் பார்த்தாலே இவள் போகுமிடம் தெரிகிறதே! விஜயா பிக்சர்ஸ் "இரத்னபுரி இளவரசி"யில் இ. வி. சரோஜா.

''இந்த வேசம் நெல்லா இருக்குதுங்களா?'' என்று கேட்கிருள் இவள்! சூர்யா பிலிம்ஸ் ''தந்தைக்குப் பின் தமையன்'' படத்தில் காகா ராதா கிருஷ்ணன்.

[இதைப்போன்ற கடிதங்கள் ஏராளமாக நமக்கு வந்திருக்கின்றன. இன்னும் இடையிலிருப்பது ஒரேஒரு மாதம்தான். சற்றுப் பொறுமையுடன்தான் இருங்களேன்! - ஆ-ர்]

பொறுத்திருப்போம்

புத்தாண்டு பிறக்கிறது என்ருல் உடனே கடந்துபோன ஆண்டுப் படங்களின் விமர்சனம் ரசிகர்களிடையே பலமாக அடிபடுகிறது. ''பேசும் படம்'' கௌரவ ஜாபிதா வெளி வருகிறது, மலரிலே. அதற்குள் நான்கு மாதங்கள் ஓடி விட்டாலும் ரசிகர்களின் ஆவல் குறைவதில்லை 'பேசும் படம்' எதைச் சொன்னுலும் நிதானமாகச் சொல்லுகிறது. ஆனல் அதன் குறி தவறுவதில்லை. ஒரு சிலர், தங்களுக்குப் பிடித்தமான எது ஒன்றும் தேர்ந்தெடுக்கப் படாவிடில் மிகவும் வருந்தினுலும் பிறகு யோசித்து அதன் முடிவை ஏற்கிருர்கள். 1959-'பேசும் படம்' பத்திரிகைக்கு ஒரு சோதனை ஆண்டு. தேர்ந்தெடுப்பதற்காக ஆராய வேண்டிய படங்கள் மிகச் சிலதான். ஆனல் அவைகளில் ஒன்று நாட்டின் பெருமையை விளக்குவதாயும் ஒன்று சமூக வாழ்வைப் படம் பிடிப்பதாயும் இதுபோன்ற குழப்பமூட்டக்கூடிய விதத்தில் அமைந்து விட்டன. 'பேசும் படம்' என்ன செய்யப்போகிறது? பொறுத்திருந்து பார்ப்போம்.

வீராசாமி,
காஞ்சீபுரம்.

['பொறுமை கடலினும் பெரிது' என்பார்கள். தங்களது பொறுமையைப் பாராட்டி நன்றி செலுத்துகிரும்.
—ஆ-ர்.]

சேவல் மார்க்கு உயர்தர ஊதுவத்திகள், வாசனைகள், கஸ்தூரி பத்தி, கதம்ப அத்தர், சுத்த சந்தன முகப்பவுடர், மட்டிப்பால் பத்தி, புனுகு, அரகஜா, வாசனை சந்தனப்பவுடர் ப்ளவர் டஸ்டு பாக்கெட் (ஆடைப்பெட்டியில் வைக்க).

கூந்தல் செழிக்க நீலா இளநரை தடுக்க

"நஞ்சன்கூடு பல்பொடி" பாக்டெரி தயாரிப்பு

பல விருத்திக்கு: ஆல்மன்டைன், ஓஜோலா.

சோல் ஏஜண்டு: யுனேடெட் கன்ஸர்ன்,
54, பந்தர் தெரு, சென்னை-1.

ஜோடிப் பொருத்தம் அவ்வளவு நன்றாக இல்லை.
அவரது முடியைப் பார்த்தால் வயதானவராகத்
தோன்றுகிறதே! ஆனால் அவள் பூரண திருப்தி
யுடனிருக்கிறாளே! அவர் மாறுவேட மணிந்திருக்
கிறாரோ? இப்படிக் குழப்பிக் கொள்ளுவானேன்?
ஸ்ரீராம் புரொடக்‌ஷன்ஸ் "ஜீவபூமி" வந்தால்
இவர்களைப் (சிவாஜி கணேசன் - பி. சரோஜா
தேவி) பற்றி நமக்குத் தெரிந்து விடுகிறது!

தினகரன் பிக்சர்ஸ்...
ஆஸ்திக்கொரு ஆசைக்கொரு
ஏ. பி. நாகராஜன் கதை, வசனம் எழுதும் இப்படம் விரைவில் வரப்போகிறது. பிரேம் நசீர், டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி, வி. ஆர். ராஜ



ஆணும் பெண்ணும்

கோபால், கே. சாரங்க
பாணி, எம். என். ராஜம்,
கண்ணாம்பா முத்துலக்ஷ்மி,
மனோரமா முதலிய நக்ஷத்
திரங்கள் நடித்திருக்கிறார்
கள். கே. சோமு டைரக்ஷ
னில் வளர்ந்துள்ளது இது.

தினகரன் பிக்சர்ஸ்...
ஆஸ்திக்கொரு
ஆசைக்கொரு
ஏ. பி. நாகராஜன் கதை, வசனம் எழுதும் இப்படம் விரைவில் வரப்போகிறது. பிரேம் நசீர், டி. கே. ராமச்சந்திரன், வி. கே. ராமசாமி, வி. ஆர். ராஜ



ஆணும் பெண்ணும்

கோபால், கே. சாரங்கபாணி, எம். என். ராஜம், கண்ணாம்பா முத்துலக்ஷ்மி, மனோரமா முதலிய நக்ஷத்திரங்கள் நடித்திருக்கிறார்கள். கே. சோமு டைரக்ஷனில் வளர்ந்துள்ளது இது.

PSR

B & W NEGATIVE

POSITIVE

AGFACOLOR

SOUND

DUPLICATING

Agfa

35mm and 16mm

Raw Cinefilm

for all purposes

AGFA PICTURE NEGATIVE FILMS:
PANKINE K and ULTRARAPID

AGFA SOUND RECORDING FILMS:
Tf 4 and Tf 6

AGFA FINEGRAIN RELEASE
POSITIVE FILM

AGFA DUPLICATING NEGATIVE FILM
AGFA DUPLICATING POSITIVE FILM

"AGFACOLOR" Negative Type B, 333 & G. 334
"AGFACOLOR" Positive Type 4, 5 and 7 and
various other types of Cinematograph Rawfilm

For particulars please write to:
The Sole Importers & Distributors:

REGE CINEFILMS PRIVATE LTD.
198, Jamshedji Tata Road, Bombay-1

Branches:
31, Chittaranjan Avenue, Calcutta-13
202, Mount Road, Madras-2

அடுக்குக் கொண்டை

தேவையான பொருள்கள்

இரண்டு வட்டங்கள், ஒரு சவுரி, ஆறு முழப்பூ, கருப்புக் கயிறு, சில ஸ்லைடுகள், சீப்பு, ஒரு கோப்பை தண்ணீர், சில கர்லிங் பின்னல்கள் இவற்றைக் கொண்டு இந்த 'அடுக்குக் கொண்டை'யைப் போட்டுக் கொள்ளும் வகை இங்கு விளக்கப்பட்டிருக்கிறது.

கொண்டை வகைகள் என்ற வரிசையில் நான்காவதாக 'அடுக்குக் கொண்டை' இடம் பெறுகிறது. இதைப் போட்டுக் காட்டுபவர் இளம் நடிகை சந்திரா. 'மாயமனிதன்' 'சபாஷ் மீனு' மற்றும் பல படங்களில் நடித்திருக்கும் நடிகை இவர். 'மெஜஸ்டிக் ஸ்டுடியோ' 'மேக்-அப்' கலைஞர் நாராயணசாமி இதைச் செய்திருக்கிறார்.

கூந்தலை வாரி, இடது பக்கம் மேல் படத்தில் காட்டியிருப்பது போல் கருப்புக் கயிற்றால் கட்டி, பிறகு அதில் ஒரு வளையத்தைச் செருகவும். அடுத்து கூந்தலை இரு பகுதிகளாக்கி, ஒரு பகுதியை வட்டத்தைச்சுற்றி மறைத்துப் பிணைக்கவும். வட்டத்தின்மேல் வளைவாகப் பூவை வைத்து, மற்றொரு பகுதியை (மேல் படம்) நன்கு சீவித் தொங்கவிடலாம். இது ஒருவகைக்கொண்டை. அல்லது, பூ வைத்த பின் கூந்தலின் மற்றொரு பகுதியில்இரண்டாவது வட்டத்தைப் பிணைத்து, (இடது புறம் கீழ்ப்படம். அதற்குப் பக்கத்திலுள்ள படம்) முதலில் செய்ததுபோல் வட்டத்தைக் கூந்தலால் பிணைக்கவும்.



பின்புறமாகக் கொண்டு வந்த கூந்தலின் முனையில் ஸ்லைடுகளைக் கொண்டு, இரண்டு முழப் பூவை சமபாகமாக மடித்து, அதில் வைத்து பிணைத்து விடவும். (கீழே உள்ள படம்) இது அடுக்குக் கொண்டையில் மூன்றாவது வகை.

இதைத் தொடர்ந்து இன்னும் இரண்டு வகைகளையும் போடலாம்.

பின்னர் முதல் வட்டத்தைச் சுற்றி பூ வைத்தது போல (மேலே உள்ள படம்) வட்டமாகப் பூவை, ஸ்லைடுகள் கொண்டு செருகி வைக்கவும். இது இரண்டாவது வகை.

இரண்டாம் முறையாக வட்டத்தை வைத்துக் கூந்தலை செருகும் போது, கூந்தலின் முனையை அடிப்புறமாகக் கொண்டுவந்து (கீழே உள்ள படம்) வெளியே கொண்டு வரவும்.

கூந்தலில் இரு சமபாகமாக பூ வைத்துத் தொங்க விடுவதற்குப் பதிலாக, சவுரியை எடுத்து, இரண்டாவது வட்டத்தில் வைத்துள்ள கூந்தலின் முனையோடுப் பிணைத்து விடவும். பின்னர் அதை அப்படியே சீப்பினால் நன்றாக வாறித் தொங்விட்டு விடலாம்.

வாரி விடப்பட்டதும் இரண்டாவது அடுக்குக்கு நடுவில் ஒரு பெரிய ரோஜா மலரை வைத்துப் பிணைக்கவும். இது கொண்டைக்கு மேலும் கவர்ச்சியைக் கொடுக்கும். இது நான்காவது வகை. (மேலே உள்ள படம்).

இதை அடுத்து மற்ெருரு வகையாகவும் இக் கொண்டையைப் போட்டுக் கொள்ளலாம்.

தொங்கவிடப்பட்ட சவுரியைப் பின்னிவிட்டு, குஞ்சம் வைத்துக் கட்டலாம். (இது ஐந்தாவது வகை.

இந்த ஐந்து வகையில்-கூந்தலின் வளர்ச்சிக் கேற்ப-அவரவர்களுக்கு எது பிடித்திருக்கிறதோ அதைத் தேர்ந்தெடுத்துக் கொள்ளலாம்.

புகைப்படங்கள் :
ஆனந்தன்

வாஹினியின்
ராஜமகுடம்
காட்சிகள்

மகத்தான படங்களைத் தயாரிப்பவர்கள் என்று பாராட்டப்படும் வாஹினி பிக்சர்ஸார் ''ராஜமகுடம்'' என்ற பெயரில் முதன் முதலாக ஒரு தமிழ்ப் படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். பி. என். ரெட்டி டைரக்ட் செய்திருக்கிறார்.

பேசும்படம்
போட்டோ ஆல்பம்

பெண்கள் சாதாரணமாக் முகவாயில் கைவைத்து பக்கவாட்டில் பார்த்தாலே கவர்ச்சியாக இருக்கும். அதுவும் ஒரு அழகி பரதநாட்டிய உடையில் இப்படி நின்ருல் இளம் உள்ளங்கள் கிளுகிளுக்கக் கேட்பானேன்! ஏ. எல். எஸ். புரொடக்ஷன்ஸார் வேகமாகத் தயாரிக்கும் "செந்தாமரை" படத்தில் பத்மினி இப்படித் தோன்றுகிருர்.

இவரது முகபாவத்தைக் கொண்டு இவர் நல்லவர் என்று கொள்ள முடியாது. இவரது வேடம் கண்டு இவர் பக்திமான் என்றும் சொல்லிவிட முடியாது. இவர் (டி. ஆர். மகாலிங்கம்) யார், என்ன செய்கிறார் என்பதையெல்லாம் அறிய வேண்டுமானால் ஞானோதயம் பிக்சர்ஸார் வேகமாகத் தயாரித்து வரும் "பத்மாவதி"யைப் பார்க்கவேண்டும்.

இவள் கண்ணின் மணிகளும் கழுத்து மணிகளும் இவள் ஒரு குணவதி என்று நிரூபிக்கின்றன. குடும்பத்தின் ஏற்றத்தாழ்வுகளைச் சமமாகப் பாவிக்கும் உத்தமப் பெண்மணியான இவள்தான் "பத்மாவதி"யோ? - ஞானோதயம் பிக்சர்ஸார் ஏராளமான பொருட்செலவில், கே. சுந்தரம் டைரக்‌ஷனில் தயாரித்து வரும் 'பத்மாவதி'யில் பி.எஸ். சரோஜா.

89698

நெற்றியிலே சுட்டி, மூக்கிலே நத்து, காதிலே கம்மல்—ஜிமிக்கி, கழுத்திலே கல்பதித்த மாலே, கை நிறைய வளையல் இத்தனேயும் இந்தப் பெண்ணுக்கு அழகு தரவில்லே. அவள் இளமையும் முத்துப்பல் தெரிய மோகனப் புன்னகை பூக்கும் முகமும் கட்டான உடலும்தான் அழகு சேர்க்கின்றன. ஐரிஸ் மூவீஸாரின் முதல் தயாரிப்பில் தேவிகா.